LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL MAGAZINE

MYLAPORE

EDITORIAL BOARD

EDITOR-IN-CHIEF

Srimathi S. Chellam, M.A., L.T.

ASST. EDITORS

Srimathi	C. R. Sathyabhama, B.A., B.T., H.Sc. (Dip.)	(*English Section*)
,,	Kanthi Sivaswami, B.A., B.Ed.	(*English Section*)
,,	V. Sarojini	(*Tamil Section*)
,,	R. Saraswathi Bai	(*Tamil Section*)
,,	R. Savitri	(*Hindi Section*)
,,	K. Dhanalakshmi	(*Art Section*)

PUPIL-EDITORS

S. R. Rajalakshmi	Form VI-A	(*English Section*)
S. Bhanumathi	,, V-B	(*English Section*)
M. Lakshmi	,, VI-A	(*Tamil Section*)
P. Nithyakalyani	,, V-C	(*Tamil Section*)
A. Mayuravalli	,, VI-B	(*Hindi Section*)
K. Kokila	,, VI-B	(*Art Section*)
K. R. Rajalakshmi	,, V-C	(*Art Section*)

Printed by Mr. G. Raghavan at The Huxley Press, 114, Armenian Street, G.T., Madras
1200 Copies and Published by Srimathi S. Chellam, M.A., L.T., Editor
at Lady Sivaswami Ayyar Girls' High School, Mylapore.

CONTENTS

		PAGE
பொதுநலப்பணி—S. R. Rajalakshmi, VI-A		1
குறளின் பெருமை—R. Kokila, VI-B	...	3
விஞ்ஞானத்தின் விந்தைகள்—S. Ganga, VI-C	...	4
ஆந்திர மாகாணப் பிரிவினை—N. Padma, VI-D	...	5
பழமொழிக் கட்டுரை—S. Mangalam, V-A	...	6
மதுரையின் மாண்பு—T. V. Ananthalakshmi, V-B	...	8
ஏறுதழுவல்—P. D. Purnavilochani, V-C	...	9
பொருளறியாப் புலவர்—P. Nithyakalyani, V-D	...	10
உழைப்பின் உயர்வு—N. Lalitha Bai, IV-A	...	12
நூல் நிலையம்—R. Hemalatha, IV-B	...	13
அங்கும் இங்கும்—G. S. Santha, IV-C	...	15
பிராணிகளிடத்தில் அன்பு—M. Meenakshi, IV-D	...	16
பள்ளியில் பலகார விற்பனை—R. Ramaa, III-A	...	17
அப்பரும் சம்பந்தரும்—C. R. Prema, III-B	...	19
பரீட்சை—R. Bhanumathi, III-C	...	19
புலவரும் நன்மாறனும்—K. S. Hemavathi, III-D	...	21
எங்கள் பள்ளித்தோட்டம்—S. Santha, II-A	...	22
வீரர் சிவாஜி—N. Balasundari, II-B	...	22
இரைவிழுங்கிய பாம்பு—V. Lakshmi, II-C	...	23
சங்கீதக் கலை—P. M. Jayalakshmi, II-D	...	24
அடையாறு—D. Hemavathi, I-A	...	24
மின்சாரம்—R. Kalavathi, I-B	...	25
நற்பழக்கம்—E. K. Saradhamani, I-C	...	26
கோபம்—A. Ponnammal, I-D	...	27
ஆசிரியர் சங்கம்: 1953-54—C. R. Sathyabhama, B.A., B.T., H.Sc., (DIP.) & V. Sarojini	...	27
மாணவியர் சங்கம்—M. Sundarambal, VI-A.	...	30
பழைய மாணவியர் தினம்—T. Kalpakam, B.A., B.T., & M. Pichai.		33
அன்னையர் சங்கம் 1953-'54—V. Rajammal	...	35
ஸங்கீத சபை—M. Gnanambal	...	37
பஜனை சத் சங்கம்—A. K. Balambikai, Vidvan	...	38
தீன பந்து சங்கம்—T. Kalpakam, B.A., B.T.	...	40
சேவா சுகாதார சங்கம்—H. R. Nagamani, B.A., B.T.	...	41
குடிமைப் பயிற்சி—V. Meenakshi, M.A., L.T.	...	43
ஸ்தாபகர் தினம் (5-11-'53)—V. Sarojini	...	44
இராஜாஜி புகழுரை	...	46
ஆசிரியர் இன்பச்செலவு—R. Saraswathi Bai	...	48
பள்ளி நாடகம்—'Rasikan'	...	50
'கல்கி' பாராட்டுரை	...	52
பள்ளி வருடாந்திரக் கலைக் கண்காட்சி: 1953-'54	...	53
அன்னையர் தினக் கொண்டாட்டம்: 1953-'54	...	54

		Page
हाथी—S. Bhagavathi, VI-A	...	1
चेनजी का किला—A. Mayuravalli, VI-B	...	1
नादमुनी—P. Anandavalli, V-A	...	2
गाँवनिवासी—R. Santha, IV-A	...	2
रेल—S. Rajalakshmi, IV-B	...	3
पांडिच्चेरी—C. Rani Bai, IV-C	...	4
माजीनी—C. R. Chandra, IV-D	...	4
ASTROLOGY—R. Saroja, VI-A	...	1
OUR CORPORATION—S. Lakshmi, VI-B	...	2
INDIAN INDUSTRIES—R. Lalitha, VI-C	...	2
MY FAVOURITE AUTHOR—R. Varalakshmi, VI-D	...	3
REST—R. Mythili, V-A	...	4
HEALTH IN OUR VILLAGES—V. E. Banni Bai, V-B	...	4
THE HIMALAYAN EXPEDITION—M. Prema, V-C	...	5
CINEMA—K. Chitra, V-D	...	6
OUR SCHOOL CROWS—E. K. Parvathavardhini, IV-A	...	6
KINDNESS TO ANIMALS—V. Saraswathi, IV-B	...	7
COLUMBUS—N. Prema, IV-B	...	8
DIGNITY OF LABOUR—G. S. Shantha, IV-C	...	8
TRAVEL TO NAOKHALI—C. R. Chandra, IV-D	...	9
KARTHIKAI—J. Bharathi, III-A	...	10
THE FIRE ENGINE—D. Indra, III-B	...	10
PUNCTUALITY—P. B. Visalakshi, III-C	...	11
THE ELECTRIC-TRAIN—K. Shantha, III-D	...	11
BALLS—S. Kalyani, II-A	...	12
THE STEAM-ENGINE—S. Lakshmi, II-B	...	12
MY TAILOR—G. Radha, II-C	...	13
BIRDS—G. Susila, II-D	...	13
THE CIRCUS—K. L. Shantha, I-A	...	14
MY DOCTOR—V. Lalitha, I-B	...	14
THE SKY—M. S. Shanthi, I-C	...	14
THE RICKSHAW—T. Kalyani, I-D	...	15
OUR SCHOOL DAY—Chronicler	...	15
OUR ANNUAL SPORTS MEET—Chronicler	...	17
EDITORIAL NOTES	...	19
OUR SCHOOL DIARY	...	26

LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL, MYLAPORE



Our Final Year Class: 1953-'54.



Dewan Bahadur Sri P. Sitaramayya, M.A., M.C.S. (Rtd.)
Honorary Secretary : 1930-'53.

Sri T. R. Venkatarama Sastriar, C.I.E.
Member, Governing Body : 1930-'53.

லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் உயர்தரப் பாடசாலைப் பத்திரிகை

மயிலை

Vol. XVI | MARCH 1954

பொதுநலப்பணி

இப்புவியின்கண் உழைத்துச் சிறப்படைய விரும்பும் தன்மையர் ஒரு சிலர். பிறர் உழைப்பால் உயர விரும்புபவர் பலர். பிறர் நலங் கருதித் தம் வாழ்வினைத் தாழ்வாக்கிக் கொள்ளவும் தயங்காதார் நூற்றில் ஒருவர் இருப்பர். பிறர் நலமும், பலமும் ஓங்கத் தன்னலம் பேணாது, கைம்மாறு கருதாது, புகழினை விழையாது உள்ளன்புடன் ஆற்றும் ஓர் அரிய செய்கையே தொண்டு அல்லது பணி என்று சொல்லப்படும். பணிகள் பல் வகைப்படும். வீட்டுப்பணி, நாட்டுப் பணி, தேசப்பணி, இறைவனுக்குப் புரியும் பணி என்பன அவற்றுள் சில. உண்மையை ஆராய்வோமாயின் தேசப்பணியாகிய சமூகப் பணியும், இறைவனுக்கு ஆற்றும் பணியும் ஒன்றே. பெற்றோருக்கும், மற்றோருக்கும், உற்றார்க்கும், அன்புடனும், மரியாதையுடனும், பணிவுடனும் தொண்டாற்றி நடத்தலே சிறந்த பணி.

தமிழ்நாடு, பண்டு, தரணியிலேயே தழைத்துச் சிறப்பெய்தக் காரணமாயமைந்தது, முற்காலப் பெண்பாலரின் நற்பணியும், நல்லறிவுமேயாம். ஐந்தில் விதைத்த சிறு ஆலவிதை, ஐம்பதில் சிறந்த, உயர்ந்த ஆலவிருட்சமாய் வளரும் என்பதை யாம் அறிவோம். இதுபோன்றே நற்பணியெனும் விதையை இளமையிலேயே விதைத்து விட்டோமாயின் அஃது முதுமையில் உயர்ந்த ஆலவிருட்சத்தைப் போன்று செழித்து, பிறருக்குப் பயன் தரும். நல்லிலக்கணங்களமைந்த நன்மாணாக்கர் இப்பண்பைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும். சாரணச் சிறுவர்கள் திருவிழா நாட்களில் தெருக்களில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுதலை நாம் காண்கின்றோம். இங்ஙனம் விசேட தினங்களில்மட்டு மன்றி என்றும் நாட்டில் அமைதியையும், மகிழ்ச்சியையும் நிலைநாட்ட மாணாக்கர்கள் முயலுதல்வேண்டும்.

குணம் பெரிதேயன்றிக் குலம் பெரிதல்ல

நாட்டில் தற்போது நிலவி வரும் வறுமையையும், அறியாமையையும் பொறுமையுடன் களைய முன்வரவேண்டும். பாரதியார் கூறியபடி எளியவர்களுக்கு நமக்குத் தெரிந்ததைத் தவறின்றிக் கற்பிக்கலாம். ஏழைகட்கு நம்மாலியன்ற பொருளுதவியையோ, உழைப்பையோ தர ஒரு நாளும் தவறக் கூடாது. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழிக் கேற்ப சந்தர்ப்பம் ஏற்பட்டக்கால் தயங்காது முன்வந்து பணியாற்றவேண்டும். "நாளை என்பது நமது நாளல்ல; அது நமனது நாள்" என்னும் கபிலரது வாக்கினை மறவாது, வாணாளை ஒரு கணமும் வீணாக்காது, பணி செய்வதையே கடமையாகக் கொள்ளவேண்டும். இறைவனைக் கண்ணாரக்கண்டு பணியாற்ற இயலாதுபோயினும், மக்களை மகிழ்வுறச் செய்து, சமூக நலம் பேணிப் பணியாற்றுவதே இறைவனுக்குச் செய்யும் பணியாம்.

புகழேந்திப்புலவர் கூறியாங்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் நாற்படைகளாகவும், ஒளி, ஓசை, சுவை, ஊறு, நாற்றம் என்னும் ஐம்புலன்களும் நல்லமைச்சராகவும், எழில் மதிவதனமே வெண் கொற்றக் குடையாகவும் கொண்டு, பணி என்னும் உயர் பண்பால் மாணவர் அரசு செலுத்தின், கல்வியெனும் விதையிலிருந்து, கேள்வியென்னும் கிளைகளில், அருந்தவம் என்னும் இலைகள் தழைத்து, அன்பு அரும்பி தருமம் மலர்ந்து போகம் எனும் கனி பழுத்துச் செழிக்கும்.

S. R. ராஜலக்ஷ்மி, VI-A.



V. Chandra, III-A.

குறளின் பெருமை

தொன்று தொட்டு நம் நாட்டில் பல அறிவாளிகளும், கல்விமான்களும் தோன்றியுள்ளனர். அவர்களுள் ஒருவராகிய வள்ளுவரை உலக மகா கவிகளில் ஒருவர் என்பது சாலப் பொருந்தும்.

இவர் அருளிச் செய்த திருக்குறளுக்குப் பல்வேறு பெயர்கள் உள்ளன. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களைப் பற்றியும் கூறுவதால் முப்பால் எனவும், நான்கு வேதங்களினின்றும் தனித்து இருப்பதால் உத்தரவேதம் என்றும், குறுகிய அடிகளில் அமைக்கப் பெற்றதால் குறள் என்றும், பெயர் பெற்றுள்ளது.

‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’

என்று ஔவை மூதாட்டியார் இதனைப் பாராட்டி யுள்ளபடியாலும், டாக்டர் போப்பையர் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளபடியாலும், இதனை எம்மதத்தினரும், எம்மொழியினரும் வேற்றுமையின்றி விரும்பிப் படிப்பதாலும் இதன் சிறப்பு நன்கு புலப்படுகிறது.

திருக்குறள், மக்கள் யாவரும் ஒப்ப ஏற்றுக்கொண்டு ஒழுகவல்ல முறையில் அமைந்துள்ள ஒரு நூல். ஆன்றோர் என்றும் தமது ஒழுக்கத்தினின்று தவறமாட்டார். தமது கடமைகளைச் செவ்வனே செய்வர். மற்றவர்கள் போற்றினும், போற்றாவிடினும் அதனைக் கருத்தில் கொள்ளமாட்டார். அத்தகைய சீரிய ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் வள்ளுவப் பெருமான். இவர் சமரச நோக்குடையவர் என்பதை இவர் பாக்களிலிருந்து அறியலாம். ஆகவே இவரை இன்னமதத்தினர் என்று குறிப்பாகக் கூறுவதற்கு இயலாது இருக்கிறது. இவர் இயற்றிய நூலை ஒப்புக்கொள்ள மறுத்த சங்கப் புலவர்கள் முன்னிலையில் தெய்வமே இவரது நூலை ஏற்றுக் கொண்டதினால் இவர் ‘தெய்வப் புலவர்’ என்று எல்லோராலும் போற்றப்படுகிறார்.

உண்மைக் கருத்துக்களடங்கிய பாக்களைக் கொண்ட இந்நூல் உலகத்தார் எல்லோராலும் போற்றப்படுவதிலிருந்தே இதன் பெருமை நன்கு விளங்குகிறது.

R. கோகிலா, VI-B.



V. Padma, II-D.

அடுத்து முயன்றாலும் ஆகும் நாள்தான் ஆகும்

விஞ்ஞானத்தின் விந்தைகள்

மாலை நேரம். 'மெரீனு' கடற்கரைப் பக்கம் போய்க்கொண்டிருந்தேன். நகரத்திலேயே வளர்ந்த நான் அதே ரஸ்தாவில் எத்தனையோ முறை போயிருக்கிறேன். ஆனால், அன்று ஏனோ என் மனம் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்தது. நான் என்னையும் மறந்து பிரகாசமான விளக்குகள் நிரம்பிய கட்டிடங்களைப் பார்த்தேன். அந்த ஜோதி மயமான வீதி எனக்கு ஸ்வர்க்கலோகத்தை நினைப்பூட்டியது. "ஸ்வர்க்கத்தைப் பார்த்திருக்கிறாயோ?" என்று கேட்டுவிடாதீர்கள்! எல்லாம் கதைகளில் படித்தது தான்! ஜன நெருக்கமான வீதியில் எவ்வளவு நேரந்தான் அவ்வாறு தன்னை மறந்து நிற்கமுடியும்! 'கிரீச்' என்று கதறிக்கொண்டே பெரிய 'கார்' ஒன்று என்னை மோதிக்கொண்டு நின்றது. இதைக் கண்டதுமே என் மனம் ஆதி மனிதனைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது.

ஆம்! அதோ அந்தக் குகையிலே தான் நாகரிகமற்ற அம் மனிதன் வசித்திருப்பான். அவன் 'வாகனம்' என்ற ஒன்றைப் பற்றிக் கேட்டிருக்கக்கூட மாட்டான். 'தற்போது விஞ்ஞானம் எத்தனை அரிய பெரிய விந்தைகளைச் செய்திருக்கிறது,' என்று எண்ணிய மாத்திரத்தில் என் உள்ளம் பெருமிதமடைந்தது அநேக விஞ்ஞானிகள் இரவும் பகலும் உழைத்த உழைப்பின் விளைவுகளல்லவா இவை! அந்தக் காலத்தில் நினைத்தபோது நினைத்த இடத்தை யடைய முடிந்ததா? இப்பொழுதோ? கார் என்ன! புகை வண்டி யென்ன! கப்பலென்ன! ஆகாய விமா... .....

'கிர்ர்ர்' என்று ஆகாய விமானம் ஒன்று தலைக்கு நேராகப் பறந்தது. 'ஆகா! இதுவும் நம்மைப்போன்ற மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்டது தானு? இந்த நிமிடத்தில் இவ்விடத்தில்! அடுத்த நிமிடத்தில் நூறு மைல்களுக்கப்பால்!' என்று வியந்து அண்ணாந்து பார்த்து நடந்துகொண்டிருந்த நான் 'டெலிபோன் பெட்டி' ஒன்றில் மோதிக் கொண்டேன். தலையைத் தடவி விட்டுக் கொண்டே அதைச் சபித்தேன். ஆனால் நண்பரொருவருக்கு அவசரமாக ஒரு செய்தி அறிவிக்க வேண்டியது நினைவுக்கு வந்ததால் உள்ளே சென்று பேசினேன். ஒருவரைப் பார்க்காமல் அவருடன் பேசுவது என்பது விந்தையிலும் விந்தையல்லவா?

கால் வலிக்கவே, கரையோரம் சென்று மணலில் அமர்ந்தேன். தூரத்தில் புகையைக் கக்கிக் கொண்டு சென்ற கப்பலில் என் கவனம் சென்றது. பண்டு சேர சோழ பாண்டியர்கள் கடல் கடந்து சென்று வாணிகம் செய்ததைப் பற்றிப் படித்தறிந்திருக்கிறோம். ஆனால், எங்கே? அருகிலுள்ள சிறு தீவுகளுக்குத்தான். இப்போது கப்

பல்கள் உலகின் ஒரு கோடியி லிருந்து மற்றொரு கோடிக்கல்லவா செல்லுகின்றன!

சில்லென்ற காற்றிலே மிதந்து வந்த சங்கீதம் என் உள்ளத்தை ஈர்த்தது. அநேக மைல்களுக்கப் பால் சங்கீத நிபுணர் ஒருவர் பாடிய பாட்டு அது. பாட்டை ரசித்தேன். நேரமாய் விட்டதால் வீடு நோக்கி நடக்கலானேன்.

சின்னஞ்சிறு தெருக்கள் கூட ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அங்கங்கே பாத ரச ஆவி விளக்குகள் நிலாவைப் போல் ஒளிவீசின. அன்று என் சிந்தனையைக் கிளறிய பெரியார் களின் உருவங்கள் ஒவ்வொன்றாய் என் மனக் கண்முன் தோன்றின.

S. கங்கா, VI-C.

ஆந்திர மாகாணப் பிரிவினை

1953-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி நம் தேச சரித்திரத் திலும், சென்னை மாகாண சரித்தி ரத்திலும் ஆந்திரம் ஓர் அழியாத இடம் பெற்றது. நமது ஆந்திர சகோதரர்கள் முப்பது ஆண்டுக ளுக்குமேலாகச் சலியாது உழைத்த தின் பயனை இறுதியில் வெற்றி பெற்றனர். பாரதத் தாயின் தவப் புதல்வரான நேருஜீயின் திருக்கரங் களால் ஆந்திர நிர்வாகம் விமரிசை யாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆந்திரர்களுக்கும், தமிழர்களுக் கும் இடையில் ஏற்பட்ட பிளவால் தான் இந்திய சர்க்கார் ஆந்திரர் களுக்குத் தனி மாகாணத்தை அமைத்துக் கொடுத்தனர் என்று சிலர் அபிப்ராயம் கொண்டுள்ள னர். ஆனல் நம் சகோதரர்கள் நம்மை விட்டுப் பிரியும்பொழுது சமாதான முறையிலேயே பிரிந்து செல்ல விரும்பியதிலிருந்து உண் மையை அறியலாம்.

இவ்வளவு ஆண்டுகளாகத் தனி மாகாணம் ஏற்படாததற்குக் கார ணம், அவர்கள் சென்னையின் மீது உரிமை கொண்டாடியதேயாகும். அவர்கள் சென்னையின் மீதிருந்த உரிமையைக் கைவிட்டவுடன் அவர் கள் கோரிக்கையும் சுலபமாக நிறை வேறியது. பெரிய புயலுக் கிடை யில் சிக்கியிருந்த சென்னைமாநகரை மீட்டுக்கொடுத்த, அரசியல் ஞானி ராஜாஜியை நாம் மறக்கவே முடி யாது.

ஆந்திரத் தலைவர்கள் பலர் ஆதி யிலிருந்தே ஆந்திர மாகாணத்திற் காக உழைப்பதையே தங்கள் குறிக் கோளாகக் கொண்டனர் என்பதை ஸ்ரீ பொட்டி ஸ்ரீராமுலு நாயுடு என் பாரின் தியாகத்திலிருந்தே அறிய லாம்.

அறிவாற்றலும் திறமையும் நிறைந்த ஸ்ரீ திரிவேதி அவர்கள் கவர்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்

டது ஆந்திரர்களின் வருங்காலத்திற்கு ஓர் நல்ல அறிகுறியாகும். அவர்கள் தலைநகரமாகிய கர்நூல் விஜயநகர சாம்ராஜ்யத்துடன் தொடர்புள்ளதாயிருக்கிறது. அந்நகரத்தின் இருபுறமும் இரு பெரிய நதிகள் ஓடுகின்றன. அந்நகரத்தைப் புதிய முறையில் அமைப்பதற்குப் பல சௌகரியங்கள் உள்ளன.

ஆந்திரர்களின் நிர்வாகத் தலைவராக ஸ்ரீ பிரகாசம் அவர்கள் பதவி வகித்தது, அவர்களுக்குப் பன்மடங்கு மகிழ்ச்சியை அளித்தது. அவர் தலைமையின்கீழ், ஆந்திரர்கள் தங்கள் அறிவாற்றலாலும், தேகவன்மையாலும் மேன்மேலும் சிறந்து விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

N. பத்மா, VI-D.

பழமொழிக் கட்டுரை

ஒரு சமயம் எங்கள் ஆசிரியர் பத்துப் பழமொழிகள் அடங்கிய கட்டுரை ஒன்றை எழுதிக்கொண்டு வரும்படி சொன்னார். கட்டுரை எழுதுவது என்றால் எளிதான காரியமா? ஆகவே எல்லா வேலைகளையும் ஒருவாறு முடித்துக்கொண்டு மாலை ஐந்து மணிக்குக் கட்டுரை எழுத அமர்ந்தேன்.

கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டேன். ஆனால் அது ஓடினால் தானே? கடைசியாகப் பழமொழிகளை ஒரு கதையில் புகுத்த எண்ணி "ஒரு ஊ" என்று எழுத ஆரம்பித்தேன். "ஊ" என்று எழுதினவுடனேயே பேனா "ஊஹூம், எழுத மாட்டேன்" என்று சண்டித்தனம் செய்ய ஆரம்பித்தது. பிறகு அதற்கு மசிபோட்டு எழுத உட்கார்ந்தேன். ஆனால் "ஐயர் வரும் வரையில் அமாவாசை காத்திருக்குமா?" முன் தோன்றிய கதை மறந்துவிட்டது. சிறிது நேரம் யோசித்தபின் வேறொரு கதையைத் தொடங்கினேன். ஒரு ஊரில் ஒரு கிழவி இருந்தாள். அவளுக்கு ஒரு தோட்டம் இருந்தது. அதிலிருந்து கிடைத்த ஊதியத்தைக் கொண்டு தன் ஒரே மகனைப் படிக்கவைத்தாள். "தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்பது பொய்யாகுமா? "தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறடி" என்பது போல் தன் தாயைவிடப் பன்மடங்கு புத்திசாலியாகவும், கெட்டிக்காரனாகவும் விளங்கினான் தனயன்.

அப்பொழுது என் தங்கை இரைந்து படித்துக் கொண்டிருந்ததனால் என் சிந்தனை தடைப்பட்டது. நான் கோபத்துடன் அவளை மெதுவாகப் படிக்கச் சொன்னேன். அவள் என் வார்த்தைகளுக்குச் செவி சாய்த்தால்தானே. என்னால் பொறுக்க முடியவில்லை. "அடியாத மாடு படியாது" என்று எண்ணி அவளை நான்கு அறைகள்

அறைந்த பிறகு, என் இடத்தில் வந்து உட்கார்ந்தேன்.

“யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே” என்ற பழமொழிக்கேற்ப என் சகோதரன் ‘லாரலப்பா’ பாட்டு முன்னே வர அவன் உள்ளே நுழைந்தான். நான் கட்டுரை எழுதுவதைக் கண்டு கேலி செய்தான். நான் அதை இலட்சியம் செய்யாமல் எனக்கு ஒரு கட்டுரை எழுதிக் கொடுக்கும்படி அவனைக் கெஞ்சினேன். அதற்கு அவன் தனக்குப் பொழுதில்லை யென்றும், தான் ‘படிக்க வேண்டும் என்றும் விதண்டாவாதம் செய்தான். உடனே நான், “பூனை கண்ணை மூடினால் உலகமே அஸ்தமனமாகிவிடுமோ? நானே எழுதுகிறேன்பார்” என்று சொல்லிவிட்டு, “எளியாரை வலியார் ஆட்டினால், வலியாரை தெய்வம் ஆட்டும்” என்று மனதில் குமுறிக் கொண்டே ரோஷத்துடன் மீண்டும் எழுத ஆரம்பித்தேன்.

“ஆடிக்காற்றில் அம்மி பறக்கும் போது இலவம் பஞ்சு எம்மாத்திரம்? பெரிய பெரிய எழுத்தாளர்களெல்லாம் கட்டுரை எழுதத் திணறுகிறார்களாம், நீ எம்மாத்திரம்” என்றான் ஏளனமாக. யார்தான் முதலிலேயே நன்றாக எழுதமுடியும்? என் சிநேகிதி ஒருத்தி ஆரம்பத்தில் சிறு கட்டுரைகளை எழுதினாள். இப்பொழுது அவள் ஒரு பெரிய கதாசிரியையாக விளங்குகிறாள். ஆகவே; “அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகராதா” என்றேன் நான்.

மறுநாள், எனக்கு ஒரு கட்டுரை எழுதிக் கொடுக்கும்படி என் சகோதரனைக் கெஞ்சிக் கொண்டிருந்த போது என் சிநேகிதி கௌசல்யா என்னைத் தேடிக்கொண்டு வந்தாள். காரணம், அவள் வகுப்புப் பத்திரிகைக்காக ஓர் கட்டுரை எழுத அவளுக்கு நான் உதவவேண்டுமாம். எப்படி விஷயம்? நான் என்னுடைய நிலைமையை அவளுக்கு விரிவாக எடுத்துரைத்தும், கேளாமல் நான் எழுதியுள்ளதை அவளுக்குக் கொடுத்துவிட்டு என் சகோதரனைக் கேட்டு நான் வேறு கட்டுரை எழுதிக்கொள்வதாம். எப்படி இருக்கிறது?

“பிச்சை எடுத்தாலும் பெருமாள், அதைப் பிடுங்கினாலும் ஹனுமான்” என்று மனதிற்குள்ளேயே சொல்லிக்கொண்டு, அவளுக்குத் தக்க சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டேன். நான் கட்டுரை எழுதிய அனுபவமே ஒரு கட்டுரையாக முடிந்துவிட்டதால் “எல்லாம் நன்மைக்கே” என்ற முடிவுடன் என் கட்டுரையை முடித்துக் கொண்டேன்.

S. மங்களம், V-A.



S. N. Savithri, IV-C.

மதுரையின் மாண்பு

பாண்டி நாட்டு ராஜதானி நகரம் மதுரை. வைகைக் கரையில் அமைந்த இந்நகரம் குலசேகர பாண்டியன் காலத்தில் கடம்பவன மாயிருந்ததாம்.

ஒரு சமயம் வாணிகனொருவன் தன் வர்த்தகத்தை முடித்து வீட்டுக்கு வரும் வழியில் இரவு நேரம் நெருங்க, நடந்து களைப்புற்ற அவன் கடம்பவனத்தில் துயின்றான். அன்று சோமவார மாகையால் தேவர்கள் அக்கடம்ப வனத்திலுறையும் சுந்தரேசப் பெருமானை நான்கு யாமங்களிலும் பூசித்துச் செல்வதைக் கண்டான். இச்செய்தியை அரசனுக்கு அறிவிப்பது தன் கடமையென உணர்ந்த அவ்வணிகன் தான் அவ் இரவு கண்டவற்றை சவிஸ்தாரமாகப் பாண்டியனுக்கு எடுத்துரைத்தான்.

அன்றிரவு சுந்தரேசப் பெருமானே பாண்டியன் கனவில் தோன்றி கடம்பவனத்தை அழித்து நகரமாக்கி, தனக்குக் கோயில் எடுக்குமாறு கட்டளையிட்டார். பாண்டியன் இந்திர விமானத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைத் தரிசித்து, கடம்பவனத்தை யழித்து நகரமாக்கி அதற்குச் சாந்தி செய்யத் தொடங்கினான். அப்பொழுது சிவபெருமான் தனது சடையினின்று மதிக் கலையின் அமுதக் கிரணத்தைச் சிறிது பரப்ப, அது சென்று எங்கும் மதுரமயமாக்கினமையால் மதுரை யென்ற பெயர் பெற்றது அந்நகர் என்று சொல்லப்படுகிறது.

இது, பழமையும், தெய்வீகமும், செல்வமும் இன்னும் பல சிறப்புக்களும் மிகுதியாகவுடையது. உமா தேவியாராகிய தடாதகைப் பிராட்டியாரும், சோமசுந்தரக் கடவுளும், உக்கிர குமாரராகிய குமரக் கடவுளும் அரசு செய்த நகரம்.

" சந்தனப் பொதியச் செந்தமிழ்
முனிவனும்
சௌந்தர பாண்டியனெனும் தமிழ்
விரகனும்
சங்கப் பலகையும் தழைத்
தினிதோங்கு
மங்கலம் பாண்டி வளநாடு "

என்று மதுரையின் சிறப்பு கூறப்படுகிறது.

எண்ணிறந்த தமிழ்ப் புலவர்கள் அநேகாயிரம் வருடங்கள் கணக்கற்ற நூல்களைச் செய்ததும், சங்கத்தைத் தோற்றுவித்து தமிழை வளர்த்ததும் மதுரையம்பதியே. சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் புரிந்ததும் இத்திவ்ய நகரமேயாகும்.

T. V. ஆனந்தலக்ஷ்மி, V-B.



M. R. Kalpakam, I-B.

"கெடுப்பதும் வாயால் படிப்பதும் வாயால்

ஏறு தழுவல்

மனிதன் உடல் உரம் பெற்று வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நெறிகளுடன், பலவகை தேகப்பயிற்சிகளையும் செய்து வரவேண்டும். விளையாட்டுக்கள் மூலம் உடற்பயிற்சியளிப்பதே தற்காலக் கல்விமுறையாகும். இது கருதியே பள்ளிகளில் மாணவர்களுக்குப் பலவகையான விளையாட்டுக்களைக் கற்பித்து, போட்டிகளும் ஏற்படுத்தி, வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகளும் வழங்குகின்றனர். விளையாட்டுக்கள் காலத்துக்கேற்ப மாறுதலடைகின்றன.

கழைக் கூத்தாடிகள் செய்யும் விநோதங்களும், சிலம்பு விளையாட்டு, கத்தி விளையாட்டு, பாரங்களைச் சுமத்தல் போன்றவையும் நமக்கு வியப்பையளிக்கின்றன. முற்காலத்தில் இவை தவிர வேறு சில விளையாட்டுக்களும் வழக்கத்திலிருந்தன. ஆனால் அவற்றுள் பல மறைந்தொழிந்தன. எஞ்சியவை சிலவே. அவற்றுள் 'ஏறு தழுவல்' என்பது ஒன்று. இந்நாளில் அதை 'சல்லிக்கட்டு' என்றும் சொல்லுகிறார்கள்.

'ஏறு தழுவல்' என்றால் காளைகளைக் கட்டிப் பிடித்து அடக்குதலாகும். மாடுகள் முல்லை நில மக்களின் சிறந்த செல்வம். 'ஏறு தழுவல்' எளிதான செயல் அல்ல. கட்டுக்கடங்காது ஓடிவரும் காளைகளைத் தழுவும்பொழுது அவற்றின் கூரிய கொம்புகளால் வயிறு கிழிந்தும், குடல் சரிந்தும், கீழ் விழுந்து முடமாகியும், பலர் உயிரை இழப்பதுண்டு. வீர வாலிபர் இவற்றைப் பொருட்படுத்தாது, எதிர்த்துச் சென்று தழுவுவது ஓர் பயங்கரமான காட்சியாக இருக்கும். முல்லை நில வீரர்களின் மார்பில் காளைகளின் கொம்புகள் பதிந்த வடுக்களைக் காணலாம். அப்படிப்பட்ட வடுக்களைப் பரிசாக எண்ணுவான் அந்நிலத்து ஆண்மகன். அத்தன்மை உடைய வீரமகனையே மணக்க விரும்புவாள் அம்முல்லை நிலத்து வீர மகள்.

நல்ல உடல் உரமும், அஞ்சா நெஞ்சமும், உயிரைத் துரும்பாக மதிக்கும் வீர உணர்ச்சியும் உடையவனையே மணமகனைத் தேர்ந்தெடுத்தல் அவ்விழாவின் முக்கிய நோக்கமாகும். இன்றும் மாட்டுப் பொங்கலன்று இந்நாள் தமிழ் நாட்டார் சிற்சில இடங்களில் கொண்டாடி வருகின்றனர்.

சல்லிக்கட்டு நடக்கும் இடத்தில் அதில் பங்கு கொள்ளும் காளைகள் நிற்பதற்காக ஓர் இடம் அமைக்கப் பெறும். அதற்குத் 'தொழுவம்' அல்லது 'வாடி வாசல்' என்று பெயர். அதன் இருமருங்கிலும் மக்கள் வண்டிகளின் மீதும், மரங்களின் மீதும், ஏறி நின்று வேடிக்கை பார்ப்பர். அன்று பல ஊர்களிலிருந்தும் முரட்டுக் காளைகள் வந்து சேரும். இவை அழகாக அலங்கரிக்கப்பட்டு, கம்பீரமாகத் தோன்றும். நமது பழந்தமிழ் நூலாகிய கலித்தொகையில் இதன் சிறப்பைப் பற்றி விரிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

P. D. பூர்ண விலோசனி, V-C.

பொருளறியாப் புலவர்

மதுரையை ஆண்ட வங்கிய சூடா மணி எனும் பாண்டியன் சிவபெருமானுக்கு நந்தவனம் அமைத்து, அன்றாட மலர்களைக் கோத்து அவன் திருமேனியை அலங்கரிக்கும் திருப்பணி செய்து வந்தான். இவன் முக்கியமாக, சண்பக மலர்களையே பிரானுக்குச் சூட்டி வந்ததால் சண்பகமாறன் எனப் பெயர் பெற்றான். இவனால் பூசிக்கப் பெற்ற ஆலால சுந்தரர், சண்பக சுந்தரர் என்று போற்றப் பட்டார்.

ஒரு நாள் மாலை, சண்பகமாறன் தன் மனைவியோடு நந்தவனத்திற்குச் சென்றான். இருவரும் ஒரு பளிங்கு மேடையில் அமர, தென்றல் காற்றொடு ஒரு இனிய நறுமணம் கலந்து வந்து மாறன் சிந்தனையைக் கிளறியது. "என்ன வாசனை இது? சோலை மலர்களின் மணமுமல்ல; காற்றுக்கோ இயல்பாக மணமில்லை; இத்தெய்வத் தன்மை வாய்ந்த வாசனை எதனின்று எழுந்தது?" என ஐயுற்றான் அவன். தன் மனையாள் பக்கம் திரும்ப, நறுமணம் அவள் கூந்தலினின்றே எழுவதாகத் தெரிந்தது. "கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டோ" என்ற தன் ஐயப்பாட்டை தெளிந்தறிய நினைத்த மாறன் அதன் உண்மையை அறிவிப்போர்க்கு ஆயிரம் பொன் கொண்ட பொற்கிழியொன்றைத் தருவதாகச் சங்கப் புலவர்களுக்கு அறிவித்தான்.

'தருமி' என்ற ஆதிசைவ இளைஞன் உள்ளன்புடன் இறைவனைப் பூஜித்து வந்தான். அவன் மாறன் வெளியிட்ட செய்தியறிந்து, தனக்கு அரசன் ஐயத்தைப் போக்கி உண்மையை விளக்க, ஓர் பாசுர மியற்றித் தருமாறு சோம சுந்தரக் கடவுளை வேண்டினான். பக்தன் வேண்டுகோளை நிறைவேற்ற எண்ணிய இறைவன்,

> 'கொங்கு தேர் வாழ்க்கை
> அஞ்சிறைத் தும்பி
> காமஞ் செப்பாது கண்டது
> மொழிமோ
> பயிலியது கெழீஇய நட்பின்
> மயிலியற்
> செறியெயிற்றரிவை கூந்தலின்
> நறியவும் உளவோ நீயறியும் பூவே'

என்ற பாசுரத்தை ஓலைச் சுவடி ஒன்றில் எழுதி தருமிக்கு அளித்தார்.

அப்பாடலின் கருத்து: "மயில் போன்ற சாயலையும், முத்துப் போன்ற பற்களையுமுடைய கற்புடைய மகளின் கூந்தலைப் பார்க்கிலும் நீயறிந்த பூக்கள் வாசனையுள்ளனவா? தேனை ஆராய்கின்ற தொழிலையுடைய வண்டே! மலர்களிடம் பழகிய காரணத்தால், பட்சபாதமாகப் பேசாது உள்ளபடி கூறுவாயாக!" என்பது.

பாடலைப் பெற்றுக் கொண்ட தருமி நேராக அரசனிடம் சென்று அதைக் காட்ட, அரசன் ஐயம்

நீங்கப் பெற்றான். அதைச் சங்கப் புலவர்களும் ஒப்புக்கொண்டனர். தருமி பொற்கிழியைப் பெற்றுக் கொள்ளலாம் என அரசன் தெரிவிக்க, தருமி உவகையுடன் அதை எடுத்துக்கொள்ள யத்தனிக்கையில் "நில், தொடாதே" என்று தடுத்தார் சங்கத்தின் தலைமைப் பதவி தாங்கிய நக்கீரர். அவர் தருமி கொணர்ந்த பாடல் பொருட் குற்ற முடையது என்று அரசனுக்குத் தெரிவித்தார்.

ஏமாற்றமடைந்த தருமி தெய்வ சந்நிதானத்திற்கு வந்து "ஐயனே! இந்த ஏழைக்கு இம்மாதிரி குற்றமுள்ள பாடலை எழுதித் தரலாமா? நான் அவமான மடைந்ததற்கு வருந்தவில்லை. உன் பாட்டில் அற்ப மானிடர் குறை காண்பதா? என்றே வருந்துகிறேன். அக்குறை தீர அருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தான். சிவபெருமான், பாட்டிற்குப் பொருட் குற்றம் கூறிய நக்கீரருக்குப் புத்தி புகட்ட எண்ணி, ஒரு புலவர் வேடந் தாங்கி சபைக்கு எழுந்தருளி "குற்றம் யாது?" என வெகுண்டு கேட்டார். நக்கீரர் "பூவின் மணத்தால் கூந்தல் வாசனை பெறுமல்லது கூந்தலுக்கு இயற்கை வாசனை கிடையாது" என்றார். இருவருக்கும் வாக்குவாதம் வலுத்தது. இறைவன் மீண்டும் "நீ பூசிக்கும் காளத்தி நாதன் இடப் பாகத்தில் கொண்ட ஞானப் பூங்கோதை கூந்தலும் அத்தன்மையதா? சொல்!" என மிக்க கோபத்தோடு வினவ, "ஆம் அதுவும் அத்தன்மையதே" எனப் பிடிவாதமாகப் பதிலிறுத்தார் நக்கீரர். எம்பிரான் நெற்றிக் கண்ணிலிருந்து பறந்த பொறிகள் நக்கீரருக்கு வெப்ப நோயுண்டாக்கிற்று. அவர் பொற்றாமரையில் மூழ்கினர்.

கபிலர், பரணர் முதலிய அவைப் புலவர்கள், புலவராக வந்தவர் எம்பெருமானே யென அறிந்து நக்கீரர் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். நக்கீரர் "கயிலை பாதி காளத்தி பாதி யந்தாதி" பாடி இறைவன் திருவருளைப் பெற்றதோடு அவரால் பொருளிலக்கணமும் போதிக்கப்பெற்றார்.

தருமி தனக்குச் சேரவேண்டிய பொற்கிழியைப் பெற்று வறுமை நீங்கினான்.

P. நித்ய கல்யாணி, V-D.

N. Rajalakshmi, VI-C.

உழைப்பின் உயர்வு

நம் தேசத்தலைவர்கள் உழைப்பின் அவசியத்தைப் பற்றி சமயம் வாய்த்த போதெல்லாம் கூறிவருகிறார்கள். நம் நாட்டில் நாளுக்கு நாள் படித்தவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு வருகிறது. அவர்கள் உழைப்பின் மேன்மையை அறிவதில்லை. ஒரு குடியானவன் நாள் முழுவதும் வேலை செய்து தனக்கும் பிறருக்கும் வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்கிறான். அதேபோல் ஒரு தச்சனோ, கொல்லனோ உழைப்பின் மேன்மையை உணருகிறான். ஆனால் படித்தவர்களோ தொழிலாளிகளை மதிப்பதில்லை. தாம் படித்து விட்டோம் என்ற இறுமாப்பினால் பிறரைத் தாழ்வாகக் கருதுகின்றனர். ஆனால் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் மக்கள் உழைப்பின் மேன்மையை நன்கு உணர்ந்து, தம்மையும் தம் நாட்டையும் உயர்த்திக் கொள்கிறார்கள்.

தொழிலாளரின் நலத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தாரின் பொறுப்பு என்று அமெரிக்கர்கள் நினைப்பதில்லை. தொழிலாளி என்றால் வேலையாள் என்றோ மதிப்பிற் குறைந்தவன் என்றோ எண்ணுவதில்லை. ஏனெனில் அமெரிக்கர் எத்தகைய வேலைகளையும் வீடுகளில் தாங்களே இயந்திர உதவியினால் செய்து கொள்கின்றனர். கல்லூரி மாணவர்கள் தங்கள் விடுமுறை நாட்களிலும், கல்லூரியில் ஓய்வு கிடைக்கும் போதும், ஹோட்டல்களில் பாத்திரம் கழுவுதல், தியேட்டர்களில் டிக்கட் விற்பனை செய்தல் முதலிய வேலைகளைச் செய்து பணம் சம்பாதித்துத் தங்கள் சொந்தச் செலவிற்கு வைத்துக் கொள்ளுகின்றனர்; ஆனால் நம் நாட்டில் இவைகளையெல்லாம் இழிவென நினைக்கின்றனர்.

எவ்வித உத்தியோகத்திலிருப்பினும் அமெரிக்கர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை வீணாக்காது ஏதாவது தொழில் செய்து கொண்டிருப்பார்கள். அவர்கள் எத்தொழிலையும் கேவலமானதென்று நினைக்கமாட்டார்கள். உதாரணமாக அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டின் மக்களுள் ஒருவர் சுரங்கத் தொழிலாளியாயும், புத்தகக் கடையில் வேலை பார்த்தும் இருக்கிறார் என்று தெரிகிறது. அவர்கள் மற்றவர்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று நினைப்பதே இல்லை. ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு மதிப்புப் பெயர் கொடுப்பர். உதாரணமாக வண்ணானுக்குக் 'க்ளீனர்' என்றும், முடி திருத்துவோர்க்கு 'ஹேர் கன்சல்டன்ட்' என்றும் கூறுவர். எனவே மேல் நாடுகளில் உழைப்புக்கு அவர்கள் அளிக்கும் ஆதரவு எத்தகையது என அறிந்து கொள்ளலாம்.

ஏன், நம் நாட்டிலேயே மகாத்மா காந்தியின் சலியாத உழைப்பையும், உழைப்பினால் அவர் சாதித்த அரிய பெரிய காரியங்களையும் அறியாதார் யார்? அவர் நமக்குத் தன் வாழ்க்கையின் மூலம் எடுத்துக் காட்டியுள்ள உண்மை உழைப்பின் உயர்வையும், பிற நாடுகளில் உழைப்பிற்கு அளிக்கப்படும் மதிப்பையும் நன்குணர்ந்து அவர்களைப் பின் பற்றினோமாயின் நாமும் மேன்மையடைவோம் என்பதில் ஐயமில்லை.

N. லலிதா பாய், IV-A.

நூல் நிலையம்

நம் தமிழ்நாட்டுப் பழம்பெரும் புலவர் திருவள்ளுவர் கல்வியின் சிறப்பைப் பற்றிக் கூறும்பொழுது

> " கண்ணுடையர் என்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லாதவர் "

என்றார். மக்கள் நன்மை தீமைகளைப் பிரித்தறிந்து நலம் பெற, கண்போன்ற கல்வியைக் கற்றுக் கொள்ளவேண்டும், அச்சுயந்திரம் கண்டுபிடிப்பதற்குமுன் மக்கள் ஓலைச் சுவடிகளில் நூல்களை எழுதிப் படித்து வந்தனர். ஒரு சிறிய நூலைப் படிப்பதற்கும் பல நாளாகும். அப்பொழுதும் அந்த நூல் தெளிவாகப் படித்து அறியக் கூடியதாய் இராது. இந்நாளிலோ ஒருவர் எழுதும் நூலின் கையெழுத்துப் பிரதியைப் பார்த்து அச்சுக் கோத்து அதைப்போன்ற லட்சக் கணக்கான பிரதிகளைச் சிருஷ்டித்து விடுகிறார்கள். அவை ஒரே சமயத்தில் பல மக்களுக்குப் பயன் படுகின்றன.

புத்தகங்கள் வாங்கிப் படிப்பதற்குப் பொருள் வசதியில்லாத காரணத்தால் ஒருவர் படிக்கவில்லையென்று சொல்லிவிட முடியாது. பற்பல இடங்களில் நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் பல ஆயிரக்கணக்கான நூல்களைக் கொண்டது. நாட்டில் வழங்கப்பெறும் பல பாஷைகளிலும் உள்ள பல புத்தகங்களையும் அவரவர் தேவைக்குத் தகுந்தாற்போல் இலவசமாகப் படிக்கலாம்.

ஒருவன் தான் படிக்க விரும்பும் நூல்களையெல்லாம் விலைக்கு வாங்கிப் படிப்பது முடியாது. ஆனால் மிகவும் விலையுயர்ந்த நூல்களையும் இலவச நூல்நிலையங்களிலிருந்து சிறிதும் பொருட் செலவில்லாமல் பெற்று, படித்து மகிழலாம்.

கல்வியறிவை விருத்தி செய்வதே நூல்நிலையங்களின் நோக்கமாகும். இங்கிலாந்து, அமெரிக்கா, மெக்ஸிகோ, ருஷ்யா, ஸ்வீடன், டென்

மார்க், ஜெர்மனி முதலிய நாடுகளில் ஆயிரக் கணக்கான நூல் நிலையங்கள் உள்ளன.

நம் நாட்டில் ஒவ்வொரு பள்ளியிலும் நூல் நிலையம் உண்டு. அவைகளில் மாணவர் படிக்கத் தகுந்த நூல்கள் பல இருக்கின்றன. அந் நூல்களை வாங்கிப் படித்துப் பயனடைய ஒவ்வொரு மாணவ மாணவியும் முயலவேண்டும் படிக்கும் நூலில் உள்ள அருமையான கருத்துக்களைக் குறிப்புப் புத்தகங்களில் குறித்துக் கொள்ளவேண்டும்.

நூல் நிலையங்களிலுள்ள நூல்களையெல்லாம் ஒருவன் கற்பதற்குப் போதிய காலம் இல்லை. ஆகையால் எவரும் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும். மாணவர் தம் ஆசிரியர்களைக் கேட்டு, தாங்கள் கற்கத் தகுந்த நூல்கள் இன்னவை யென்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

"கல்வி கரையில்ல, கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணிபல—
தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே
நீரொழியப்பாலுண் குறிகிற்
றெரிந்து."

R. ஹேமலதா, IV-B.



T. N. Gomathi, V-A.

அங்கும் இங்கும்

பிள்ளைப் பெருமாளையங்கார் வேதியர் குலத்தில் அவதரித்தவர். வேதங்களில் நிபுணராகவும், சிறந்த பக்தராகவும் இருந்தார். மதுரையில் திருமலை நாயக்கர் அரசாட்சி செய்து கொண்டிருந்த பொழுது, அவரது ராஜாங்கத்தில் 'ராயசம்' என்னும் உத்தியோகம் பெற்று, தருமங்களில் வழுவாது காலக்ஷேபம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் ராஜ சபையில் எல்லோரும் தத்தம் காரியங்களைச் செய்து கொண்டிருக்கும்போது அவர் 'கிருஷ்ண கிருஷ்ண' என்று சொல்லிக்கொண்டு தமது உத்தரீயத்தை இரண்டு கைகளினாலும் தேய்த்தார். அங்குள்ளோர் அது கண்டு, பிள்ளைப் பெருமாளையங்காரை நோக்கி, "சுவாமி! நீர் இவ்வாறு செய்யக் காரணம் என்ன?" என்று வினவ அவர், "திருவரங்கம் பெரிய கோயிலில் நம்பெருமான் திருத்தேரில் எழுந்தருளி வீதியில் பவனி வருகையில், தீவட்டியின் சுவாலை தேர்ச்சீலையில் பற்றி அது எரியவே, அதை யான் அவித்தேன்" என்றார். அதைக் கேட்டவர்கள் நகைத்து ஐயங்கார் சித்தப்பிரமையினால் இவ்வாறு செய்தனர் என்று நினைத்து, இவர் நிலைமையை திருமலை நாயக்கருக்கு அறிவித்தனர். திருமலை நாயக்கர் இதன் உண்மையை அறியும் பொருட்டு, திருவரங்கம் பெரிய கோயிலுக்கு ஆள் அனுப்பி, விசாரித்துக் கொண்டுவரச் சொன்னார். அங்குள்ளோர் திரைச்சீலையில் தீப்பற்றியது உண்மையென்றும், அருகில் பெருமாளைச் சேவித்துக் கொண்டிருந்த பிள்ளைப் பெருமாளையங்கார் அதனை அவித்தார் என்றும் கூறினார்கள்.

இவ்வற்புதத்தைக் கேட்ட திருமலை நாயக்கர் ஆனந்தத்துடன் ஐயங்காரை அணுகி, "திருவரங்கத்தில் நம்பெருமான் இரதோற்சவத்தன்று தாங்கள் அங்கிருந்ததாகச் சொல்கின்றனரே. இதன் உண்மை என்ன"? என்று கேட்க, ஐயங்கார், "நான் இங்கிருந்தபடியே நம் பெருமானை மானஸீகமாகச் சேவித்தேன்" என்றார். அதைக் கேட்ட திருமலைராயன் இவருடைய பக்தி விசேடத்தை நினைத்து மெய்மறந்தவராய், பிள்ளைப் பெருமாளையங்காருக்கு நமஸ்காரம் செய்து பூஜித்துச் சென்றார்.

அன்றிரவு, திருமலை நாயக்கர் தான் திருவரங்கத்திற்குச் சென்றதாகவும், அங்கு ஐயங்காரைக் கண்டு அவருடன் பெருமாளைச் சேவித்து விட்டுத் திரும்புகையில் ஐயங்கார் காணாமற் போனதாகவும் கனவு கண்டு சஞ்சலத்துடன் விழித்தெழுந்தார். உடனே ஐயங்காரை வரவழைத்து, "தேவரீர் மகிமையை அறியாது இதுவரை உம்மை வேலை வாங்கிய குற்றத்தை மன்னித்து, என்னைத் தங்கள் அடிமையாகக் கொண்டு,

அடியேன் செய்யவேண்டிய பணி விடையை நியமித்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, ஐயங்கார் தாம் திருவரங்கம் பெரிய கோவிலில் நிரந்தரமாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்றார். திருமலை நாயக்கரும் அவர் விரும்பியபடியே ஏற்பாடுகள் செய்து கொடுத்தார். அப்பால் ஐயங்கார் 'திருவேங்கடப் பாமாலை', 'திருவரங்கத்து' 'மாலை, அழகரந்தாதி' முதலிய பல நூல்களைச் அருளிச் செய்தார். அவர் தம் சீடர்களிடம் தமக்குப் பசுவினால் மரணம் சம்பவிக்கும் எனக் கூறியிருந்தார். ஒரு நாள் அவர் கோயிலில் பெருமாளைச் சேவித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு நொண்டிப் பசு காலிடறி அவர் மீது விழ, அது பொறாமல் அவர் பரமனடி சேர்ந்தார்.

G. S. சாந்தா, IV-C.

பிராணிகளிடத்தில் அன்பு

"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்
தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்"

என்று பாரெங்கும் பறைசாற்றினார் நமது இந்திய நாடு தோற்றுவித்த அமரகவி பாரதியார். ஆம், அஃது முற்றிலும் உண்மையே. பேசும் திறனற்ற இதயத்தில் கொந்தளிக்கும் எண்ணங்களை வெளியிடச் சக்தியற்ற அச்சீவன்களிடம் நாம் அன்பு செலுத்தவேண்டும். மனிதன் மிருகங்களின் உதவியின்றித் தனித்து வாழ இயலாது. மனிதன் தன்னை எவ்வளவு கொடுமைப் படுத்தினாலும் மிருகங்கள் அவனுக்காக உழைக்காமலிருக்கின்றனவா? ஆதலின் அவைகளிடம் அன்புடன் இருத்தல் நாகரிக மனிதனின் கடமையன்றோ.

உள்ளப் பண்பின் உயர்வுக்கே 'நாகரிகம்' என்று பெயர். ஆனால் தற்கால மனிதனே 'நாகரிகம்' என்ற சொல்லில் புதைந்து கிடக்கும் உண்மைப் பொருளையறியாது, பல தீமைகளைப் புரிகின்றான். மிருகங்களை வேட்டையாடுவது நாகரிக மனிதனுக்கு ஒரு பெரும் கேளிக்கையாக இருக்கிறது. ஆனால், அந்தோ! வாயற்ற அம்மிருகங்கள் தங்கள் இதயக் கனலிலே எழும் துன்பச் சுவாலைகளை யாரிடத்தில் காண்பிக்க இயலும். மனிதன் மிருகத்தைக் கொன்றால் அது அவனுக்கு விளையாட்டு, அவனைத் தடுப்பவர் எவருமிலர். ஆனால் ஒரு விலங்கு ஒரு மனிதனைத் தற்பாதுகாப்பிற்காகவும், தன் இரைக்காகவும் கொன்றாலோ அது மிகவும் கொடுமையாம். அந்த மிருகத்தைக் கொல்ல, அம்மம்மா! எத்தனை மனிதர், எத்தனை வகையான கொடிய ஆயுதங்களைக் கொண்டு ஓடி வருகின்றனர். பாவம், அவைகளின் புண்பட்ட இதயங்களுக்கு

ஆறுதல் அளிப்பவர் யார்? அவை நமக்காக எவ்வளவு உழைக்கின்றன. சோறிட்ட தலைவனை அவை என்றென்றும் மறப்பதில்லை. வாழ் நாள் முழுவதும் தம் எஜமானனுக்காகவே உழைத்து மடிகின்றன.

தலைவனைப் பிரிந்து அவனிடம் பழகிய எந்த மிருகமும் தனித்து வாழாது. அதன் உழைப்பிற்கும், விசுவாசத்திற்கும் பிரதியாக நம் அன்பைத்தான் எதிர்பார்க்கின்றது.

பிராணிகளிடம் எவ்வாறு அன்பாக இருப்பது? நோயுற்ற மிருகங்களை ஆதரிக்கவேண்டும். நம்முடைய நன்மைக்காக மிருகங்களைப் பலியிடக்கூடாது. அவைகளை நன்கு போஷிக்கவேண்டும். பிறர் துன்புறுத்துவதைக் கண்டாலும் அவர்களுக்குத் தக்கபடி எடுத்துரைக்கவேண்டும். மிருகங்களின் நலத்தைப் பேணும் S. P. C. A. என்னும் சங்கம் ஒன்று நம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வருடத்திற்கொரு முறை இதன் ஆதரவில் கொடிகள் விற்கப்பட்டுப் பணம் சேகரிக்கப்படுகிறது. இந்த வருமானத்தைக் கொண்டு அச்சங்கம், முதுமையால் உழைக்கமுடியாத மிருகங்களையும், நோயுற்ற மிருகங்களையும் பாதுகாக்கிறது. மக்களுக்கு ஜீவகாருண்யத்தின் அவசியத்தைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

தொன்று தொட்டு நாகரிகத்திற் சிறந்த தமிழ் நாட்டில் பிறந்த நாம், அஹிம்சா மூர்த்திகளாகிய இயேசு நாதர், புத்தர், மகாத்மா காந்தி முதலியவர்களின் சுவடுகளைப் பற்றி, ஜீவகாருண்யத்தின் புனிதத் தன்மையையும், அவசியத்தையும் அறிந்து நடப்போமாயின், அன்றே நாம் உண்மையான நாகரிகம் படைத்த மனிதர்களாவோம்.

M. மீனாக்ஷி, IV-D.

பள்ளியில் பலகார விற்பனை

பலகார விற்பனைத் தினத்தன்று எங்கள் பள்ளி 'ஹாலில்' ஒரு தேர்த் திருவிழாக் கூட்டம் போல் கூடி விடுவோம். கண்ணைக்கவரும் அலங்காரங்கள், மூக்கைத் துளைக்கும் வாசனைகள், நாவுக்கினிய பக்ஷணங்கள்-எல்லாம் பத்தணுவிற்கு!

அன்று, பிற்பகல், சுமார் ஒரு மணிக்கு ஸ்ரீமதி சரஸ்வதி துரைசாமி, M.A., L.T., அவர்கள் விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். அதன் பிறகே மாணவிகள் உள்ளேவந்து பக்ஷணம் வாங்க அனுமதிக்கப் பட்டனர்.

முதலில், முதல் படிவ மாணவிகள் செய்த 'கரகர' வென்ற முறுக்கு வரவேற்றது. அதற்கடுத்தாற் போல் இரண்டாம் படிவ மாணவி

கள் செய்த காரச்சேவை குவியல் குவியலாக வைக்கப்பட்டிருந்தது. இவற்றை வாங்கிச் சாப்பிட்டு, 'முதல்தரம்' 'பிரமாதம்' என்று புகழ்ந்து கொண்டே மேலே சென்றோம்.

இரண்டு செட்டியார்கள் மூன்றும் படிவ மாணவியர் செய்த காரமான சுண்டலை வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள். அதை விரும்பியவர்கள் விரும்பாதவர்கள் எல்லோரும் வாங்கிச் சாப்பிட வேண்டியதாயிற்று.

நான்காம் படிவ மாணவிகள் செய்த பஜ்ஜி சிறிது நேரத்திற்குள் பறந்தோடிவிடவே, சிலர் "பஜ்ஜித் தூளாவது கொடுங்கள் ஒரு அணவுக்கு" என்று கேட்க ஆரம்பித்தனர். அலங்கரித்த மேடைமேல் ஆறும்படிவ மாணவியர் தயாரித்த ஜாங்கிரி பொன்னிறமாகத் திகழ்ந்தது. மிகவும் ருசிகரமாயிருந்தது. ஐந்தாம் படிவத்தின் பர்பி எங்களுக்கு மிகவும் பிடித்தது. காரத்தைத் தின்று நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு வந்த நாங்கள் பர்பியை மிக விரும்பித் தின்றோம்.

ரேஷன் எல்லாம் போன இந்தக் காலத்தில் ஆசிரியைகள் செய்த சாக்லேட்டுக்கு ரேஷன் செய்து விட்டார்கள். முதல் வகுப்பிலிருந்து ஆறும் அமைப்புவரை மாணவியர் போட்டியிட்டுக் கொண்டு வந்ததால் அவர்கள் அவ்வாறு செய்ய வேண்டியதாயிற்று. முதியோர் வகுப்பு மாணவியர் நீர்மோரும், பீடாவும் தயாரித்திருந்தனர்.

மணி நான்கு; கடை காலி. கோவிலில் திருவிழாவிற்குப் பிறகு பந்தம்பிரி உற்சவம் நடைபெறுவதுபோல் பந்தம்பிரி ஆரம்பித்தது. அழகாகத் திகழ்ந்த அலங்காரங்கள் ஐந்து நிமிடத்திற்குள் கீழே உருவிப் போடப்பட்டன. விற்பனை விழாவும் இனிது முடிந்தது.

R. ரமா, III-A.

S. Seetha, VI-D.

அப்பரும் சம்பந்தரும்

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கும் மறைக்காட்டீசரைத் தரிசிக்க ஆலயத்திற்கு வந்தனர். அங்குத் திருக்காப்புச் செய்யப்பட்ட நாள் முதல் கதவு அடைக்கப்பட்டே இருந்தமையால் அடியார்கள் வேறொரு பக்கத்தில் ஒரு வாயில் வைத்து அதன் வழியாகச் சென்று கடவுளைத் தரிசித்து வந்தார்கள்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அப்பரை நோக்கி, "நாம் எப்படியும் கடவுளை நேர்முகத் திருவாயிலின் வழியாகத்தான் தரிசிக்க வேண்டும்; ஆகையால் கதவு திறக்கும்படி நீர் திருப்பதிகம் பாடும்" என்றார். அப்பமூர்த்தி,

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார்வலஞ் செய்ம்மறைக்காடரோ
கண்ணினாலுமைக் காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.

என்ற திருப்பதிகத்தைப் பாடியருள, கதவு திறக்கப்படாமையால் மீண்டும்,

'இரக்க மொன்றிலீர்'—

என்ற பதிகம் பாடினார். கதவு திறந்தது. நாயன்மார் இருவரும் கோயிலுட் சென்று இறைவனை வணங்கி, திருப்பதிகங்கள் பாடி இன்பம் அடைந்தார்கள். பிறகு திருநாவுக்கரசர் சம்பந்தரைப் பார்த்து "கோயிற் கதவு திறத்தலுக்கும் அடைத்தலுக்கும் நீர் ஓர் பதிகம் பாடும்" என்றார். திருஞானசம்பந்தர் முதல் பதிகம் பாடி முடித்ததுமே கதவு அடைத்துக் கொண்டது. அதைக் கண்ட நாவுக்கரசர் தாம் இரண்டு பதிகம் பாடும்வரைத் திறவாத கதவம் சம்பந்தப் பெருமான் முதற் பதிகம் பாடியதுமே அடைத்துக் கொண்டவிந்தையை எண்ணி மகிழ்ந்தார். அன்றிலிருந்து அக்கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய வழக்கம் என்றும் நிகழ்வதாயிற்று.

அங்கு நேர்ந்த அற்புதத்தைக் கண்டு அடியார்கள் ஆச்சரியப்பட்டு நாயன்மார் இருவரையும் வாழ்த்தி வணங்கினர்.

C. R. பிரேமா, III-B.

பரீட்சை

பரீட்சை என்பது நம் அறிவை விருத்தி செய்வதற்கும், நம் அறிவின் திறத்தைப் பிறர் அறிவதற்கும் உள்ள ஓர் தேர்தலாகும். நம் அறிவு நமக்குள்ளேயே பொதிந்து கிடந்தால் பயன் ஒன்றும் இல்லை. ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்து கிடக்கும் அறிவை வெளிப்படுத்தும் சாதனமே பரீட்சை என்பது.

நமக்கும் நம் அறிவிற்கும் இடையே நடக்கும்போரே பரீட்சை. காகிதமாகிய போர்க்களத்தில் வீரராகிய நாம் வில்லாகிய பேனாவை அல்லது பென்சிலை வைத்துக் கொண்டு அவற்றிலிருந்து வெளிப்படும் அம்பாகிய எழுத்துக்களைக் கொண்டு வீரமாகப் போரிட வேண்டும். இறுதியில் மார்க்குகளாகிய வெற்றியைப் பெறுகிறோம். ஆனால் நாம் இதில் உபயோகிப்பது வீரமல்ல. நம் மூளையும், ஞாபகசக்தியுமே ஆகும்.

நாம் ஒரு முறை பரீட்சையில் வெற்றி பெற்று விட்டால் போதாது. அதை நிலைநிறுத்தவே பாடுபடவேண்டும். ஒருவன் ஒரு மலையின் மீது முக்கால் பங்கு தூரம் ஏறிச் சென்ற பிறகு, உச்சியை யடைந்து விட்டோம் என்ற இறுமாப்பில் திரும்பிப் பார்த்தால் எப்படி விழுகிறானோ, அதேபோல் நாம் பரீட்சையில் ஒருமுறை வெற்றி பெற்று விட்டோம் என்ற இறுமாப்பில் படிக்காமலிருந்தால் நமக்கும் அதேகதிதான்.

பரீட்சையில் வெற்றியை இலக்காகக் கொண்டு நாம் பாடங்களைப் படித்த போதிலும், நாம் படித்த விஷயங்களை மறக்கக்கூடாது. "கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு" என்ற முதுமொழியை மனதில் கொண்டு நம் பள்ளியில் நமக்காக ஏற்படுத்தும் பரீட்சைகளை ஊக்கத்துடன் எழுதி வெற்றி பெற்று, நம் அறிவைப் பன்மடங்கு பெருக்கிக்கொள்ள வேண்டும்.

R. பானுமதி, III-C.



P. K. Suseela, III-D.

புலவரும் நன்மாறனும்

பாண்டிய நாட்டை இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் அரசாண்டு வந்தான். அவன் அக்காலத்து முடியுடை மூவேந்தரிலும் சிறப்புற்று விளங்கினன். இவன் வருவோர் போவோர்க்கெல்லாம் வரையாது வழங்கிவரவே இவன் புகழ் நாடெங்கும் பரவியது. இரவலர் அவன் அரண்மனையைத் தாய் வீடாகவே கருதிவந்தனர்.

புலவர்கள் பலர் தங்கள் ஆற்றலுக்கு ஏற்ப அவன் குணதிசயங்களைப் புகழ்ந்து பாடினர். ' அவன் செங்கோலாட்சியைப் பற்றியும், போர்த்திறனைப் பற்றியும் புகழ்ந்து, மிகுதியாகப் பரிசில் பெற்றுச் சென்றனர். பாண்டியன் புகழைக் கேள்வியுற்ற ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் பாண்டி நாடடைந்து அரசனை வணங்கிப் பல கவிகளைப் பாடினர். அரசன் மகிழ்ந்தான்; ஆனல் புலவருக்குப் பரிசில் தராது காலந் தாழ்த்தினன். புலவர் சில நாள் காத்திருந்தார்.

ஒரு நாள் மூலங்கிழார் சினந்து அரசனைப் பார்த்து "இறைவ! நம்மால் கொடுக்க முடிந்தவற்றை உடனே கொடுப்பதும், இல்லாவிட்டால் 'இல்லை' என்று சொல்லிவிடுவதும் கொடையின் லட்சணங்கள். தன்னல் முடியாதவற்றை முடியும் என்று கூறுவதும், செய்யக்கூடிய காரியத்தை முடியாது என்று கூறுவ்வதும், கொடுப்பவர்க்குக் குற்றமாகும். நீ இப்பொழுது செய்வது அதைப்போன்றது. இதுவரை என்னிடம் இப்படி நடந்துகொண்டவரை நான் பார்க்கவில்லை. நீயும் உன் குழந்தைகளும் நோயின்றி வாழ்வீர்களாக!" என்று கூறி அவ்விடம் விட்டுச் சென்றார்.

மனங்கலங்கிய மன்னன் "பெரியீர்! பொறுத்தருளவேண்டும். நான் பரிசில் தந்தால், நீர் என்னை விட்டு அகலுவீர் என்றே இதுவரைத் தராதிருந்தேன். பிழை பொறுத்துப் பரிசில் பெற்றுச் செல்லவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

புலவர் சினம் தணிந்து பல பரிசில்கள் பெற்று அரசனோடு அறுசுவையுண்டி அருந்தித் தன் ஊரையடைந்தார்.

K. S. ஹேமாவதி, III-B.



T. N. Chandra, V-C.

எங்கள் பள்ளித்தோட்டம்

எங்கள் பள்ளிக்கூடம் ஒரு பெரிய மைதானத்தில் கட்டப்பட்டுள்ளது. அதன் முன்புறம் புஷ்பத் தோட்டமும் பின்புறம் காய்கறித் தோட்டமும் இருக்கின்றன. நாங்கள் நாள்தோறும் முறை வைத்து, தோட்டவேலை செய்வோம்.

காலை வேளையில் நாங்கள் பள்ளிக்கூடத்திற்கு வரும்பொழுது, புஷ்பங்களின் அழகும், நறுமணமும் எங்களை மெய்மறக்கச் செய்யும். பலவர்ணமுள்ள புஷ்பங்களும் வாசனைப் புஷ்பங்களும், அழகும் நறுமணமும் கூடிய புஷ்பவகைகளும் எங்கள் தோட்டத்தில் நிரம்ப உண்டு.

காய்கறித் தோட்டத்தில் பல பாத்திகள் அமைத்து அவைகளில் அவரை, புடல், கீரைவகைகள் முதலிய செடி கொடிகளைப் பயிர் செய்கிறோம். எங்கள் உழைப்பின் பயனை, கத்தரி, வெண்டை, கொத்தவரை, அரைக்கீரை, முளைக்கீரை முதலியவற்றிலிருந்தும், ரோஜா, மல்லிகை முதலிய மலர்ச் செடிகளின் மூலமும் அடைகிறோம். செடி கொடிகளிலிருந்து அன்றாடம் பறிக்கப்படும் காய்கறிகள் பசுமையாகவும், நல்லதாகவும், சுத்தமாகவும் ருசிகரமாகவும் இருக்கும்.

எங்கள் பள்ளியைப் பார்வையிட வரும் பெரியார்கள் எங்கள் தோட்டத்தையும், தோட்டவேலையில் எங்களுக்கு இருக்கும் ஊக்கத்தையும் மிகவும் பாராட்டுவதனால் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

S. சாந்தா, II-A.

வீரர் சிவாஜி

சிவாஜி 1627-ம் ஆண்டு பூனாவில் பிறந்தார். இவர் மராட்டியர். சிறுவராக இருந்தபோதே அவரிடம் தலைவராதற்கு வேண்டிய அறிகுறிகள் காணப்பட்டன. "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதுபோல் விளையாடும் போதும் இவர்தான் தலைவராக இருப்பார்.

இவர் சிறு வயதிலேயே பல வித்தைகளைக் கற்றார். தாதாஜி காண்டதேவ் என்பவர் இவருக்குப் போர் முறைகளைக் கற்பித்தார். பல பெரியார்கள் சரித்திரங்களைப் படித்ததினால் இவருக்கு மதப் பற்றும் தேசப்பற்றும் உண்டாயின.

இவர், வயது வந்ததும் சில கோட்டைகளைக் கைப்பற்றி அவைகளுக்குத் தலைவரானார். அதனால் பீஜப்பூர் சுல்தானும், ஔரங்கசீப் என்னும் மொகலாய சக்கரவர்த்தியும் இவரைக் கண்டு அஞ்சினார்கள். சிவாஜியை வீழ்த்த அவர்கள் பல

வகையிலும் முயன்றார்கள்; ஆனால் அவை பயனளிக்கவில்லை. ஒரு தடவை ஔரங்கசீப் இவரைத் தந்திரமாகச் சிறைசெய்ய, இவரும் தந்திரமாகவே அச்சிறையிலிருந்து வெளியேறினார்.

பிறகு இவர் இராஜகிரிக் கோட்டையில் மஹாராஷ்டிர நாட்டின் தலைவராக முடிசூட்டிக் கொண்டார். சிவாஜி ஒரு சிறந்த போர் வீரர் மட்டுமன்றி, சிறந்த ராஜ தந்திரியாகவும் இருந்தார். 'அஷ்டப் பிரதான்' என்னும் மந்திரி சபையைக் கொண்டு அரசாட்சியைச் செம்மையாக நடத்தினார். இவர் ஆட்சியில் குடிகள் இன்பமாக வாழ்ந்தனர்.

N. பாலசுந்தரி, II-B.

இரை விழுங்கிய பாம்பு

ஒரு நாள் மலைப்பாம்பு ஒன்று இரைதேடி அலைந்தது. அதன் எதிரே ஒரு முயல் ஓடி வரவே, பாம்பு அதைப் பிடித்து விழுங்கிற்று. ஆயினும் அதன் பசி தணியவில்லை. மீண்டும் அது ஆகாரம் தேடிச் சென்றது.

வழியில் ஒரு தோட்டம் குறுக்கிட்டது. அதற்குள் சென்றால் இரை அகப்படும் என்று பாம்பு நினைத்தது. தோட்டத்தின் நான்கு பக்கங்களிலும் முள்வேலி போடப்பட்டிருந்ததால், பாம்பு வேலியின் சந்து வழியாக நுழைந்தது. பாதி உடம்பு உள்ளே சென்றது. விழுங்கிய முயல் முட்டுக்கட்டையாய் இருந்ததால் முழு உடலையும் உள்ளே இழுத்துக்கொள்ள முடியவில்லை.

பாம்பு இவ்வாறு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கையில் அதன் வாய்ப்புறமாக ஒரு பெருச்சாளி ஓடிற்று. வலுவில் வந்த இரையை சும்மா விடுமா? அதையும் 'கபக்' என்று விழுங்கிற்று. இதனால் பாம்பிற்கு நகரமுடியாத நிலை ஏற்பட்டது. 'பசி தணிந்ததே, திரும்பிப் போகலாம்' என்று நினைத்தது; ஆனால் பின் நகருவதற்கு பெருச்சாளி முட்டுக்கட்டையாயிற்று.

அப்பொழுது அவ்வழியாக வந்த தோட்டக்காரன் பாம்பைப் பார்த்து விட்டான். முதலில் பயந்தான். ஆனால் வேலிக்குள் அது சிக்குண்டு கிடப்பதைப் பார்த்துத் தெளிந்து, அதைத் தடியால் அடித்துக் கொன்றான்.

V. லக்ஷ்மி, II-C.



S. Vidhya, II-B.

சங்கீதக் கலை

செவிக்கு இன்பத்தைத் தரும் தொனிகளைப் பற்றிய கலைக்குச் சங்கீதம் என்று பெயர். அது சிறந்த கலைகளுள் ஒன்று. பாமரர்களுக்கும், பண்டிதர்களுக்கும், பாலர்களுக்கும், விருத்தர்களுக்கும், தாவரங்களுக்கும், பிராணிகளுக்கும், புழுப் பூச்சி முதலிய சகல ஜீவராசிகளுக்கும், அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாகிய சங்கீதமே, இன்பத்தைத் தரக் கூடியது.

கடவுளைவழிபட்டு அவரை அடைவதற்கு ஏற்ற சாதனம் சங்கீதமே. மனிதர்களுக்கு ஈசன் அளித்துள்ள குரல் பேசுவதற்கு மட்டுமன்றி பாடுவதற்கும் இன்றியமையாதது. உயர்ந்த சங்கீதத்தை நாம் அடிக்கடி கேட்கவேண்டும். யாவரும் தேனையும், பாலையும் விரும்புவது போல சங்கீதத்தையும் விரும்புகிறார்கள். துன்பத்திலும் இன்பம் ஊட்டுவது சங்கீதமே.

நாட்டியத்திற்கு இன்றியமையாத உபகலைகளில் சங்கீதம் ஒன்று. நாட்டியத்தின் பெருமை சங்கீதத்தின் அமைப்பைப் பொறுத்தது. சங்கீதத்தின் அமைப்பு அதை இயற்றும் ஆசிரியருடையது.

நாட்டின் செல்வங்களாகிய நாம் சிறுவயதிலேயே நல்ல முறையில் தக்க ஆசான் மூலம் மதிப்பிற்குரிய கலைகளில் ஒன்றாகிய சங்கீதத்தைப் பயின்று நம்மைப் பெருமைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

P. M. ஜயலக்ஷ்மி, II-D.

அடையாறு

நாம் வசிக்கும் திருமயிலை க்ஷேத்திரத்தின் தென் பக்கத்தில் சுமார் ஒரு மைல் தூரத்தில் அடையாறு என்ற அழகிய இடம் இருக்கிறது. இது இயற்கையழகும், செயற்கையழகும் ஒருமிக்க நிறைந்த, கண்ணைக் கவரும்படியான தோற்றத்தையுடையது. மேற்கே கிண்டி, சைதாப்பேட்டை யென்ற ஊர்களையும், கிழக்கே வங்காளக்குடாக் கடலையும் வடக்கே மயிலாப்பூரையும் தெற்கே திருவான்மியூரையும் எல்லையாக உடையது.

இவ்விடத்தில்தான் பிரசித்தி பெற்ற பிரம்மஞான சங்கக் கட்டிடம் உள்ளது. இங்கு மிகப் பழமை வாய்ந்த பெரியதொரு ஆலமரம் உண்டு. இதைச் சுற்றிலும் விழுதுகள் வீழ்ந்து பூமியில் பரவி வேரூன்றி மீண்டும் கிளைத்திருப்பதால், உபந்நியாசங்கள் நிகழும்

பொழுது, பல்லாயிரக்கணக்கான மக்கள் இதன் நிழலில்அமர்ந்து கேட்க முடிகிறது. இந்த பிரம் மாண்டமான ஆல விருக்ஷத்தைக் காண இங்கு மக்கள் வருவதுண்டு.

அடையாற்றில் பெரிய வாசக சாலை ஒன்று இருக்கிறது. அறி வாளிகளால் மிகவும் போற்றப்படுகி றது. இங்கு அநேக அரிய நூல் களைச் சேமித்து வைத்திருக்கிறார் கள். இங்கிருக்கும் ஆயிரக்கணக் கான நூல்களைப் படித்துப் பயனடைபவர் பலர்.

சிறுவர்களும், சிறுமிகளும் கல்வி யறிவு பெற்று நாட்டின் நன் மக்களாக விளங்குவதற்கு இங்கு குருகுல முறையில் பயிற்சியளிக்கப் படுகிறது. சங்கீதம், நாட்டியம் முதலான கலைகளை மேலும் மேலும் விருத்தி செய்வதற்கு ஸ்ரீமதி ருக்மிணிதேவியார் அரும்பாடுபட்டு, கலாக்ஷேத்திரம் என்ற ஒரு ஸ்தா பனத்தை நிறுவியிருக்கிறார். இத் தனை பெருமை வாய்ந்த இடத்தைச் சிறுவர்களும் சிறுமிகளும் கட்டா யம் சென்று காணவேண்டும்.

D. ஹேமாவதி, I-A.

மின்சாரம்

தற்கால நாகரிக வாழ்க்கையில் மின்சாரம் பல விதங்களில் பயன் படுகிறது. மின்சார விளக்குகள், ரேடியோ, டெலிபோன் முதலிய சாதனங்களை நாம் உபயோகித்து வருகிறோம். ஆனால், வெகுகாலம் வரை மக்கள் மின்சாரத்தைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ளவில்லை. கரடித்தோலைத் தேய்த்தால் அதில் ஒருவித கவர்ச்சி இருப்பதையும், 'டார்ப்பிடோ' மீன்களின் அருகில் சென்றால் அதில் ஒருவிதச் சக்தி இருப்பதையும் கண்டார்கள். 1746-ம் வருஷத்தில் வாட்சன் என்ற ஆங்கிலேயர் மின்சக்தியைக் கண்டு பிடித்து உலகிற்கு அறிமுகப் படுத் தினர்.

அதன் விளைவாக, நாம் உபயோ கித்து வந்த எண்ணெய் விளக்கு களுக்குப் பதிலாக மின்சார விளக் குகளை உபயோகிக்கிறோம். வீடு களிலும், ஆபீசுகளிலும் பங்காக் கள், ஓலைவிசிறிகள் - இவற்றிற்குப் பதிலாக இப்போது மின்சார விசி றிகள் சுழலுகின்றன. மற்றொருவ ரோடு பேசவேண்டுமானல் டெலி போன் மூலம் பேசுகிறோம். தூரத் தில் இருப்பவர்களுக்கும் கடல் கடந்த நாடுகளில் இருப்பவர்க ளுக்கும் அவசர விஷயங்களைத் தந்திமூலம் தெரிவிக்கிறோம். குறைந்த செலவிலும் குறைந்த நேரத்திலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல மின்

சார ரயில் ஓடுகிறது. சங்கீதக் கச்சேரிகளையும், பிரசங்கங்களையும், அரசியல் விஷயங்களையும், உலகச் செய்திகளையும் இருந்த இடத்திலிருந்தே, ரேடியோவைத் திருப்பி ஆனந்தமாகக் கேட்கிறோம்.

மேற்கூறியவாறு, மின்சாரம் நம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். மின்சார சக்தியைக் கொண்டு பல அற்புதங்களைச் செய்துவருகிறார்கள் பெரியார்கள்.

R. கலாவதி, I-B.

நற்பழக்கம்

நம் பள்ளியில் நமக்குப் போதிக்கப்படும் பல நற்பழக்கங்களில் காலந்தவறாமை ஒன்று. சாதாரணமாக நாம் எந்த வேலையைச் செய்தாலும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்கப் பழகவேண்டும்.

பள்ளிக்கூடத்தைப் பொறுத்த வரையில் நாம் காலந்தவறாமல் குறிப்பிட்ட நேரத்தில் பள்ளிக்கு வரவேண்டும். அப்படிவரத் தவறினால் எத்தனையோ கஷ்டங்கள் நமக்கு உண்டாகின்றன. எல்லோரும் பிரார்த்தனை மண்டபத்தில் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும்போது, நாம் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு வெளியில் நிற்கவேண்டியிருக்கிறது. பிரார்த்தனை முடிந்த பிறகு தலைவி அவர்கள் சொல்லும் சில முக்கியமான விஷயங்களைக் கேட்க முடியாமல் போய்விடுகிறது. அதுமட்டுமல்ல; தலைவியை நேரில் கண்டு காரணத்தைக் கூறவேண்டும். இவையெல்லாம் போதாதென்று 'காலந்தவறாமை' என்னும் பதிவுப் புத்தகத்திலும் நம் பெயர் எழுதப்படுகிறது.

இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்தால் நாம் நேரந்தவறி பள்ளிக்கு வருவதற்கு நம்மைத்தான் குறை கூறிக்கொள்ள வேண்டும். நம் தலைவியும், ஆசிரியைகளும் நம்மை நல்ல வழிகளில் பழக்கப் பெரிதும் பாடு படுகின்றனர். ஆகவே நாம் நம் இளமையில் இப்பழக்கங்களைக் கைகொண்டோமானால் பிற்காலத்தில் சிறப்புடன் வாழலாம்.

E. K. சாரதாமணி, I-C.



T. V. Visalakshi, II-A.

சயுபுத்தி போனாலும் சொற்புத்தி வேண்டாமா?

கோபம்

கோபம் என்பது கெட்ட சுபாவங்களில் ஒன்று. 'ஆறுவது சினம்' என்னும் ஔவையார் மொழிப்படி நாம் கோபத்தைத் தடுக்கப் பழக வேண்டும்.

தன் இஷ்டப்படி நடக்க முடியாவிட்டாலும், தனக்குத் தேவையான பொருள்கள் கிடைக்காவிட்டாலும், பிறரால் தொந்தரவு செய்யப்பட்டாலும், நோய் வாய்ப்பட்டாலும், தன்னிடமுள்ள பொருள்களை இழக்க நேர்ந்தாலும் கோபம் வருவது சகஜம். கோபம் வரும்பொழுது மன அமைதி குறையும். அதிக ஆத்திரம் உண்டாகும். அச்சமயத்தில் நன்றாக ஆலோசிக்க முடியாது. அவசரப்பட்டுத் தகாத காரியங்களையும் செய்து வருந்துவதுண்டு.

பிராணிகளுக்குக் கோபம் உண்டாகும்போது இதர பிராணிகளைக் கொல்லும். மக்களுக்குக் கோபம் உண்டாகும்போது உணவை வெறுக்கிறார்கள். தூக்கம் கெடுகிறது. அதனால் தேக அசௌக்கியம் ஏற்படுகிறது.

ஒருவர் வேலை செய்யும்பொழுது யாராவது கோபித்துக்கொண்டால் வேலை தடைப்படும். ஊக்கம் குறையும். செய்யும் வேலையும் நன்றாய் இராது.

மனிதர்களுக்குக் கோபம் உண்டாவது சகஜமே. ஆனால் ஆற்றில் வெள்ளம் வரும்போது அணை கட்டித் தடுப்பதுபோல் கோபத்தை அடக்கி, சாந்தமடைந்து, செய்ய வேண்டிய காரியங்களைச் செவ்வனே செய்தலே சிறப்பைத் தரும். ஏனெனில் கோபம் குடியைக் கெடுக்கும் ஆற்றல் வாய்ந்தது.

A. பொன்னம்மாள், I-D.

ஆசிரியர்கள் சங்கம் 1953-'54

ஆசிரியர்கள் சங்கம் தோன்றிப் பதினோராண்டுகளாக எம் தலைவி ஸ்ரீமதி எஸ். செல்லம், M.A., L.T., அவர்கள் தலைமையிலும் பேராதரவிலும் சிறப்புற வளர்ந்து வந்துள்ளது. உள்ளன்போடு கல்வி புகட்டி குழந்தைகள் முன்னேற்றத்திற்காகப் பல துறைகளிலும் தொண்டாற்றி, இன்பம் காண்பதுதான் இச் சங்கத்தின் அங்கத்தினர்களாகிய எங்கள் நோக்கம்.

அலுவல் கூட்டங்கள் :

மாதா மாதம் இறுதிச் சனிக்கிழமையன்று நாங்கள் கூடுவது வழக்கம். இவ்வருடம் ஆறு முறை கூடி, போதனை முறை பற்றிச் சர்ச்சை செய்து, தலைவியின் கருத்

துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டுப் பயனடைந்தோம். மாணவியர் கல்வி அபிவிருத்திக்காகப் பல விஷயங்களை இக் கூட்டங்களில் விவாதித்துத் தலைவியின் முடிவான அபிப்பிராயம் அறிந்து அதற்கேற்பப் போதனு முறையைச் சீர்திருத்திக் கொண்டோம்.

'கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்பது ஓர் அரிய உண்மையல்லவா? கல்வி கேள்விகளிற் சிறந்த சான்றோரைக் கூட்டங்களுக்கு அழைத்து அவர்கள் நிகழ்த்திய இலக்கியச் சொற்பொழிவுகள் வாயிலாக அநேக அரிய விஷயங்களைக் கேட்டறிந்தோம். ஸ்ரீமான்கள் கி. வா. ஜகந்நாதன், M.A., ரா. பி. சேதுப் பிள்ளை B.A., B.L, ஆகியோர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் அறிவிற்கு விருந்தாக அமைந்தன.

நாடகம் :

வருடத்துத் திட்டங்கள் ஒருவிதமாக நிறைவேற்றப் பெற்ற பிறகு ஆசிரியர்சங்க நாடகம் ஒன்று நடைபெறுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. பாட சம்பந்தமான நிகழ்ச்சிகளையே நடிக்க எடுத்துக் கொள்வோம். சென்ற ஆண்டு இறுதியில் "நூர்ஜஹான்" என்ற சரித்திர சம்பந்தமான நாடகம் நடத்தினேம். மாணவியர் நூற்றுக்கணக்கானவர் கண்டு களித்தனர். நாடகத்திற்குத் தலைமை வகித்த 'கல்கி' அவர்கள் எங்கள் நடிப்புத் திறனைப் புகழ்ந்து பேசினர். [கல்கியின் தலைமையுரை இம்மலரில் மற்ரோரிடத்துக் காண்க.] நாடகத்தின் மூலம் வசூலிக்கப்பட்ட தொகையை சீதாலக்ஷ்மி இலவச மருந்துச் சாலைக்கு நன்கொடையாக அளித்தோம்.

விசேஷ நிகழ்ச்சிகள் :

வருடா வருடம் நூற்றுக்கணக்கான பெண்களைச் சகல கலைகளிலும் வல்லவராக்கி வெளியுலகத்திற்கு அளிக்கும் நாங்கள் ஒரு பெண்மணி D. P. I. பதவியளிக்கப்பட்டாள் என்ற செய்தி கேட்டுக் குதூகல மடைந்தோம். ஸ்ரீமதி O. C. சீனிவாசன் அவர்கள் பெண் குலத்திற்குத் தேடித்தந்த பெருமை சாமனியமானதல்ல. D. P. I. பதவியேற்கும் முதல் ஸ்திரீ இவர்தான். பெண்கள் எப்பேர்ப்பட்ட பெரும் பதவியையும் ஏற்கத் தகுதியுடையவர்கள் என்பதைக் கண்கூடாகக் காட்டிய அவருக்கு, அவர் பதவியேற்ற மறுநாளே ஒரு தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தோம். சென்னை நகர பெண் பாடசாலைகளின் ஆசிரியைகள் அவரைக் கௌரவிப்பதற்காக நடத்திய தேநீர் விருந்திலும், களியாட்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்டோம்.

பெண்கள் முன்னேற்றத்திற்காகவே தம்மைத் தியாகம் செய்துள்ள பெருமாட்டி, சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மையாரை அறியாதார் யார்? அன்னர் சேவையைப் பாராட்டி, மாம்பலம் ராமகிருஷ்ண ஆண்கள்

உயர்தரப் பாடசாலையில், சாரதா பெண்கள் கழகத்தின் சார்பில் 29—11—'53 அன்று ஒரு விழா நடைபெற்றது. முதன் மந்திரி ராஜாஜி சகோதரியின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். இவ் விழாவில் எம் சங்கத்தார் அனை வரும் கலந்து கொண்டதோடு வெள்ளித் தட்டு ஒன்று அவருக்கு ஞாபகார்த்தமாக அளித்தோம். எங்களில் அநேகர் சகோதரியின் ஆதரவில் படித்து முன்னேறியவர் கள் என்பது அறியத் தக்கது.

விருந்துகள் :

நிர்வாகக் குழுவின் காரியதரிசி யான குருகுல தர்மாச்சாரிய K. ரங்கசுவாமி ஐயங்கார் அவர்கள் வருட முடிவில் நாங்கள் செய்த சிறு தொண்டைப் பெரிதாகப் பாராட்டி விருந்தளித்து ஆசீர்வதிப்பது பல ஆண்டுகளாக நடைபெற்று வரு கிறது. சென்ற ஆண்டு இறுதியி லும் அது மிகச் சிறந்த முறையில் அமைந்தது. அவருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வ தோடு, எங்களுக்கு ஊக்கமளித்து வரும் அவர் பல ஆண்டுகள் திட ஆரோக்கியத்துடன் இருந்து எங்க ளுக்கு வழிகாட்ட இறைவனை முழு மனதுடன் பிரார்த்திக்கிறோம்.

சங்கத்தினரிடையே நிலவும் ஒற் றுமை மனப்பான்மை, பள்ளி நிகழ்ச்சி ஒவ்வொன்றின் வெற்றிக் கும் காரணமாகும் என்பது மிகை யல்ல. நாங்கள் ஒரு குடும்பத்தினர் என்ற கொள்கையே எங்களுக்குப் பலத்தையும் உற்சாகத்தையும் அளித்து வருகிறது. எங்களுள் ஒரு வரான பள்ளிக் காரியாலயத் தலை வர் (Head Clerk) தம் புதல்வன் சிரஞ்சீவி N. R. கோபாலன் உப நயனத்தை முன்னிட்டு எங்களுக்கு ஓர் இனிய விருந்தளித்தார். சங் கத்தின் நிதியிலிருந்து வெள்ளி விளக்கொன்று வாங்கி அவனுக்கு அளித்து ஆசீர்வதித்தோம்.

எங்கள் குடும்பத் தலைவர்களா கவே நாங்கள் மதித்து வரும் பள்ளி நிர்வாகக் குழுவினர் எங்களைக் கௌரவித்து அன்பு பாராட்டுவது வேறு ஸ்தாபனங்களில் காணமுடி யாததொன்று. தீபாவளி தோறும் பள்ளிச் சிப்பந்திகள் உள்பட எல்லோருக்கும் அதிகப் பொருட் செலவில் வஸ்திரங்கள் வழங்கி ஆசி கூறுவதே அவர்களுக்கு எங்கள் மீதிருக்கும் பற்றுதலைக் காட்டும். அவர்களுக்கு எம் மாறாத நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளுகி றோம்.

வருடா வருடம் ஜனவரி மாத இறுதியில் எம் தலைவி எங்களுக்கு ஓர் இனிய விருந்தளிப்பது வழக் கம். அது இவ்வருடம் மிக நேர்த்தி யாக அமைந்ததற்குக் காரணமில் லாமலில்லை. பள்ளிக் காரியதரிசி குருகுல தர்மாச்சாரிய K. ரங்க சுவாமி ஐயங்கார் அவர்கள் கடுமை யாக நோய்வாய்ப்பட்டிருந்து, தெய் வச்செயலால் அதனின்று தப்பிய பிறகு அவர் கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சி இது. நாங்கள் அனைவரும் வெகு உற்சாகத்தோடு

விருந்தில் கலந்து கொண்டோம். தலைவியை மூத்த சகோதரியாகவே நாங்கள் கருதுகிறோம். தம் உடன் பிறந்தவர்கள் க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து, குற்றம் மறந்து, குணம் கொண்டு, பெருமைப்படுத்தும் அவருக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்ய முடியும்? அவருக்குச் சகல பாக்கியங்களும் கிட்டுமாறு இறைவனை மனப்பூர்வமாக வேண்டுகிறோம்.

—C. R. சத்தியபாமா, B.A., B.T., H.Sc., (Dip.)
V. ஸரோஜினி.

மாணவியர் சங்கம்

(Talk given under the auspices of the Union of Girl's Schools in the city on 5–9–53 at St. Ebba's Girl's High School.)

இங்கு கூடியிருக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவிகளுக்கும், மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் வணக்கம். இங்கு நான் பேச எடுத்துக் கொண்ட விஷயம் 'மாணவியர் சங்கம்' என்பதுபற்றி ஆகும். 'லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் உயர்தரப் பாடசாலை' என்னும் பெயர் கொண்ட எங்கள் பள்ளியில் 'மாணவியர் சங்கம்' என்னென்ன அலுவல்களைச் செய்கிறது என்பதைச் சுருக்கமாகக் கூற முயல்கிறேன்.

இலட்சியப் பெண்களை உருவாக்குவதும், இளமை தொட்டே அவர்களுக்கு அறிவு வளர்ச்சியுடன் நல்லொழுக்கங்களைக் கற்பிப்பதுமாகிய ஆற்றல் பள்ளிகளுக்கே உரியதாகும். முதல் அமைப்பிலிருந்து ஆறும் அமைப்பு வரையிலுள்ள மாணவிகள் எங்கள் பள்ளி மாணவியர் சங்கத்தின் அங்கத்தினர்கள். இச்சங்கம் பல கிளைச் சங்கங்களாகப் பிரிந்து, அதன் அலுவல்களைத் திறம்பட நடத்துகிறது.

சுய ஆட்சிக் குழு:

(Girls' Representative Council) மாணவியர் சங்கத்தின் முக்கியமான பிரிவு இதுதான். இதில் வகுப்பு மாணவிகளால் தேர்ந்தெடுக்கப்படும் வகுப்புத் தலைவிகளும் மாணவியர் சங்கத்து கிளைச் சங்கங்களின் தலைவிகளும் அங்கத்தினராவர். இந்தக் குழு மாதமொரு முறை கூடித் தம் குறைகளைத் தலைவிக்கு எடுத்துரைத்தும், பள்ளி அலுவல்களில் தங்கள் ஆலோசனைகளைக் கூறியும், பள்ளியில் செய்ய வேண்டிய அலுவல்களைக் குறித்து சர்ச்சை செய்தும், மாணவியர் நலனை நாடி வேலை செய்கிறது.

மாணவியர் பஞ்சாயத்து சபை :

(Girls' Court of Honour) சுய ஆட்சிக்குழு அங்கத்தினர்கள் பஞ்சாயத்து சபைக்கு தமக்குள் ஐந்து அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கின்றனர் இச்சபை பள்ளியில் மாணவியர் செய்யும் சிறு குற்றங்களை விசாரிக்கும் உரிமையுடையது. இதுவரை இவர்கள் திறமை வெளிவர சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

சேவாசங்கம், சுகாதாரச் சங்கம் :

(Seva Sangam and Sanitary Board) தாமாகவே மனமுவந்து தொண்டு புரியும் ஆர்வமுடைய மாணவிகளுக்குப் பயிற்சியளிப்பது இச்சங்கத்தின் நோக்கமாகும். பள்ளிச் சுற்றுப் புறத்தையும், முக்கியமாக Bath rooms, Lavatories முதலிய இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துகிறது. மாணவிகளிடையே ஒழுங்குமுறை நிலவுதற்கும் பாடுபடுகிறது. மேலும் கொடி தினத்தன்று கொடிகள் விற்றும், நோயுற்ற அனுதைக் குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்களைச் சேகரித்துக் கொடுத்தும் பிறர் துன்பத்தை ஓரளவு போக்கப் பாடுபடுகிறது. இவ்வாண்டு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, கோதாவரி வெள்ள நிவாரண நிதிக்குத் துணிகள் சேகரித்து அனுப்பியதாகும்.

சத், பஜனுசங்கங்கள் :

இச்சங்கங்கள் மாணவிகளின் உள்ளத்தைப் பண்படுத்தி அவர்கள் நல்வழியில் நடக்க உதவுகிறது. இவைகளின் ஆதரவில் அறிஞர் பலர் நமது பழம்பெரும் நூல்களின் சாரத்தையும், கற்பரசிகளின் வரலாறுகளையும் சீரிய முறைகளில் எடுத்துரைப்பதால், மாணவிகளுக்குத் தமது முன்னோர் காட்டியுள்ள சிறந்த வழிகளைக் கூடிய வரையில் பின்பற்றவேண்டும் என்னும் உறுதி பிறக்கிறது.

சங்கீதக் கோஷ்டி :

(Musical Choir) சங்கீதத்தில் ஆர்வமும் திறமையும் உள்ள மாணவிகளுக்கு இது மேலும் பயிற்சியளிக்கிறது. பள்ளியில் நடக்கும் விசேஷக் கொண்டாட்டங்களில் இக்கோஷ்டியினர் இன்னிசை கீதங்கள் பாடி யாவரையும் மகிழ்விக்கின்றனர்.

ஸ்தோத்திர பாட வகுப்புகள் :

(Stotrapatam Groups) இது மாணவிகளுக்குத் தமிழில் பக்தி ரசம் ததும்பும் தாயுமானவர் பாடல், தேவாரம், திருப்புகழ் முதலியவற்றையும், சம்ஸ்கிருதத்தில் பகவத்கீதை, முகுந்தமாலை, கிருஷ்ண கர்ணாம்ருதம் போன்றவைகளிலிருந்து சிறந்த பகுதிகளையும் எடுத்துப் போதிக்கின்றது. அவ்வப்போது வெளியிடங்களில் நடக்கும் போட்டிகளில் இதன் அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டு தவருது பரிசுகள் பெற்று வருகின்றனர்.

Hobby Club :

இது மாதம் நான்கு முறை மாலை வேளைகளில் கூடி தையல், சித்திரம் போன்றவைகளில் ஆர்வமும், திறமையும் உடைய மாணவிகளுக்கு மேலும் பயிற்சியளித்து, இக்கலைகளை விருத்தி செய்துகொள்ள உதவுகிறது.

லலிதகலைக் கழகம், சங்கீதசபை :

(Fine Arts Association and Sangeetha Sabha) மாணவியர் ஏட்டுப் படிப்புடன் நில்லாது நடனம், நடிப்பு, சங்கீதம் முதலிய கலைகளையும் விருத்தி செய்துகொள்ள இச்சங்கங்கள் உதவுகின்றன. லலித கலைக் கழகத்தின் ஆதரவில் மாணவியர் வருடமொருமுறை புராணங்களிலிருந்து சிறந்த பகுதிகளை தேர்ந்தெடுத்து நாடகம் நடிக்கின்றனர். சங்கீத சபையின் கீழ் நடக்கும் பல அறிஞர்களின் சொற்பொழிவுகள் மாணவியரின் அறிவை விசாலப்படுத்துகின்றன. ஆண்டு இறுதியில் நடக்கும் 'இசை விழா' என்னும் நிகழ்ச்சியில் மாணவியர் பங்கெடுத்துக்கொண்டு ஆடல் பாடல்களில் தங்களுக்குள்ள திறமையை வெளிப்படுத்துகின்றனர்.

வருஷக் கடைசியில் தொண்டர் தினம், மாணவியர் தினம் (Workers' Day, Girls' Own Day) என்னும் இரு முக்கியமான நிகழ்ச்சிகள் கொண்டாடப்படுகின்றன. தொண்டர் தினத்தன்று பள்ளி மேற்கூறிய சங்கங்களில் பங்கெடுத்துக் கொண்டு பாடுபட்ட மாணவிகளுக்கு ஒரு சிறிய விருந்தளித்து, அவர்களைக் கௌரவித்து உற்சாகப் படுத்துகின்றது.

மாணவியர் தினத்தன்று முதல் வகுப்பிலிருந்து ஆறும் அமைப்பு வரை உள்ள மாணவியர் 1500 பேரையும் பள்ளி சட்டத்திட்டங்கள் கட்டுப்படுத்துவதில்லை. ஆகவே அவர்கள் கட்டுப்பாட்டிலிருந்து சிறிது விலகி நின்று ஆடல் பாடல்களில் குதூகலமாக ஈடுபடுகின்றனர். அச்சமயம் மாணவியர் அனைவருக்கும் பள்ளி அதிகாரிகள் இனிய தின்பண்டங்கள் அளித்து இன்புறச் செய்கின்றனர்.

மேற்கூறியவைகளிலிருந்து எங்கள் பள்ளியில் மாணவியர் சங்கம் தன் ஒற்றுமையாலும், உழைப்பாலும் எவ்வாறு பாடுபட்டு முன்னேறுகிறது என்பது தெரியும். இச்சங்கங்களின் அங்கத்தினர்களும், அலுவலாளரும், தலைவிகளும் மாணவிகளே. இச்சங்கம் பள்ளிக் குறிக்கோள்களான அன்பு, அறிவு, சேவை, சரணம் என்னும் நான்கையும் மனதிற்கொண்டு அதற்கேற்ப மாணவியர் நலத்துக்காகப் பாடுபடுகிறது.

கடைசியாக இக்கூட்டத்தில் வந்து பேசும் அரிய வாய்ப்பை எனக்களித்த என் பள்ளித் தலைவிக்கு எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

M சுந்தராம்பாள், VI-A.

பழைய மாணவியர் தினம்

பழைய மாணவியர் சங்கத்தின் பதினாறும் ஆண்டு விழா இவ்வருடம் ஜனவரி மாதம் 23-ம் தேதி சனிக்கிழமையன்று கொண்டாடப் பட்டது. இப் பள்ளியின் பழைய மாணவியும் Children's Garden School ஆசிரியையுமான ஸ்ரீமதி S. சாந்த லக்ஷ்மி அவர்கள் இவ் விழாவிற்குத் தலைமை வகித்தனர்.

விருந்தினரை உபசரிப்பதற்கான முன்னேற்பாடுகள் ஒரு வாரத்திற்கு முன்பே ஆரம்பிக்கப் பெற்றன. விழா தினத்தன்று பிரார்த்தனைக் கூடம், அரங்க மேடை, சிற்றுண்டியருந்தும் இடம் முதலியன அலங்காரத்துடன் விளங்கின.

சுமார் 3-30 மணியிலிருந்து விருந்தினர் வர ஆரம்பித்தனர். அவரைப் பள்ளித் தலைவியும், ஆசிரியைகளும், ஆறும் அமைப்பு மாணவியரும் வரவேற்று, சிற்றுண்டி யருந்துமிடத்திற்கு அழைத்துச் சென்றனர். விருந்தினர் தொகையதிகரிக்க அதிகரிக்க கலகலப்பும் பேச்சுக் குரலும் அதிகமாயின. அவர்கள் சாவகாசமாய்ச் சிற்றுண்டியருந்திக் கொண்டே சிநேகிதிகளோடு பேசிச் சிரித்து, மகிழ்ந்து மதிமயங்கி, இருந்த இடத்தை விட்டு நகராமலிருந்ததைப் பார்த்த நாங்கள், பின்னல் நேரவிருக்கும் நிகழ்ச்சிகளை இவர்கள் மறந்துவிட்டார்கள் என்றே நினைத்தோம்.

சிற்றுண்டிக்குப் பிறகு அனைவரும் பிரார்த்தனை மண்டபத்தில் கூடினர். நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஸர். எஸ். வரதாச்சாரியார், காரியதரிசி ஸ்ரீ K. ரங்கசுவாமி ஐயங்கார், மற்றும் பள்ளி நண்பர்கள் ஆகியோர் விஜயம் செய்து எங்களைக் கௌரவித்தனர்.

காரியக் கூட்டத்திற்குப் பிறகு, விழா பிரார்த்தனையோடு ஆரம்பமாயிற்று. தலைவி ஸ்ரீமதி S. செல்லம், M.A., L.T., அவர்கள் எல்லோருக்கும் நல்வரவு கூறி, அவைத் தலைவி ஸ்ரீமதி S. சாந்த லக்ஷ்மி அவர்களை அனைவருக்கும் அறிமுகப்படுத்தி, அவரை அக்கிராசனம் வகித்து விழாவை நடத்தக் கேட்டுக்கொண்டார். பாரதத் தாய்க்கும் தாய்ச்சாலைக்கும் அவர் வாழ்த்துக் கூறிய பிறகு பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

பழைய மாணவியான ஸ்ரீமதி K. ராஜேஸ்வரி, M.A., பள்ளி நிர்வாகக் கமிட்டி அங்கத்தினருள் ஒருவரான ஸ்ரீமான் T. R. வெங்கடராம சாஸ்திரியார் மறைவு குறித்து, பழைய மாணவியரின் சார்பாக அநுதாபம் தெரிவித்து அச்செய்தியை அவர் குடும்பத்தினருக்கு அறிவிக்க வேண்டினர். பழைய மாணவி ஸ்ரீமதி J. ஜெயம், பள்ளிக் காரியதரிசியாக இருபத்துமூன்று ஆண்டுகள் சேவை செய்த பெரியார் திவான் பஹதூர் ஸ்ரீ P.

சீதாராமய்யா, M.A., M.C.S. (Retd.) அவர்கள் மறைவு பள்ளிக்கு எத்துணை பெரிய நஷ்டம் என்பதை எடுத்துக்கூறி, பழைய மாணவியர் சார்பாக அநுதாபம் தெரிவித்து, அச்செய்தி அவர் குடும்பத்துக்கு அறிவிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள்.

பழைய மாணவி ஸ்ரீமதி P. A. அம்மணி, B.A., M.Ed., அவர்கள் குருகுல தர்மாச்சாரிய ஸ்ரீ K. ரங்கசுவாமி ஐயங்காருக்கு எதிர் பாராது நேர்ந்த தேக அசௌக் கியத்தின் கொடுமை பற்றியும், ஏதோ தெய்வீக சக்தியொன்று அவரை மீட்டும் உலகத்துக்குத் தந்ததைக்குறித்து பழைய மாணவி யரின் சார்பாகத் தன் மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்ததோடு அவர் பல்லாண்டு வாழ்ந்து நம் பள்ளிக்குச் சேவை புரிய பரம் பொருளை இறைஞ்சுவதாகத் தெரி வித்தார்கள். இச் சந்தோஷத் செய்தியை அவருக்கும் அவர் குடும் பத்தினருக்கும் தெரிவிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்.

ஸ்ரீமதி P. A. அம்மணி அவர்கள் சொன்னவற்றை ஆமோதித்து டாக்டர் ஸ்ரீ S. திரிபுரசுந்தரி அவர் கள் பேசினார்கள்.

அடுத்தபடியாக இச்சங்கக் காரிய தரிசியும் பொக்கிஷதாரும் தத்தம் வருடாந்திர அறிக்கைகளைப் படித்தனர்.

நிர்வாகத்தினர் சார்பாக நீதிபதி ஸ்ரீ P. N. இராமசுவாமி ஐயர் அவர் கள் பேசியபோது பள்ளியின் சிறப்புக்குக் காரணமாயுள்ள காரியதரிசியையும் தலைவியையும் புகழ்ந்து, பள்ளி மேல் மேலும் சிறந்து விளங்கவேண்டும் என்று பிரார்த்தித்தார். ஆசிரியைகளின் சார்பாக ஸ்ரீமதி தனலக்ஷ்மியும், பழைய மாணவியருக்காக ஸ்ரீமதி எஸ். சரஸாவும், ஆறும் அமைப்பு மாணவியரின் பிரதிநிதியாக ஸ்ரீ V. K. புஷ்கலாம்பாளும் பேசினர்.

அவைத் தலைவி தன் முடிவுரை யில், இப்பள்ளி உயர்ந்த முறையில் நடைபெற்று வருகிறதென்றும், நற்பழக்க வழக்கங்கள் நன்கு வற்புறுத்தப் படுவதால் மாணவியர் பல நலன்களை அடைய வாய்ப்பு ஏற்படுகிறதென்றும், பள்ளி மேல் மேலும் சிறப்புற ஓங்கி வளர வேண்டுமென்றும் கூறினர்.

கதம்ப நிகழ்ச்சிகளுக்குப் பிறகு விழா முடிவுற்றது.

T. கல்பகம், B.A., B.T.
M. பிச்சை,
காரியதரிசிகள்.

T. K. Vijayalakshmi, V-D.

அன்னையர் சங்கம் 1953-'54

விண்ணுற ஓங்கி நிற்கும் லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் பாடசாலையின் அன்னையர் சங்கத்திற்கு எட்டாண்டுகள் பூர்த்தியாகி மிக வெற்றிகரமாக நடந்து வருகிறது. இதில் உள்ள காரியக் கமிட்டி அங்கத்தினர்களின் பேரூக்கத்தாலும் பெரு முயற்சியாலும், இதர அன்னையர்களின் பேராதரவாலும் இச் சங்கம் சிறப்புற வளர்ந்து வலிமை பெற்றிருக்கிறது.

காரியக் கமிட்டிகள்:

1942-ஆம் ஆண்டு முதல் இதன் கௌரவ அக்ராசனராக இருந்து வரும் ஸ்ரீமதி சம்பகம் பாஷ்யம் அய்யங்கார் அவர்கள் இச்சங்கத்தின் அலுவல்கள் யாவற்றிலும் பங்கெடுத்துக் கொண்டு எங்களுடன் ஒத்துழைத்து வருகிறார். இதில் 62 ஜீவிய கால அங்கத்தினர்களும் 300 சாதாரண அங்கத்தினர்களும் உள்ளார்கள்.

நிகழ்ச்சிகள்

கண்காணிப்பு தினம்:

சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதி பள்ளி போதனை முறைகளைக் காண அன்னையர்கள் யாவரும் அழைக்கப் பட்டிருந்தனர். குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு உழைத்து வரும் ஆசிரியைகளின் போதனை முறைகளை நேரில் காண மிகச் சிலரே வந்தனர். அவர்களுக்கு எங்கள் நன்றி.

கண்காட்சி:

இச் சங்க ஏழாம் ஆண்டு விழாவையொட்டி வழக்கம்போல் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி மற்ற ஆண்டுகளை விடச் சிறப்பாக அமைந்திருந்தது. அன்னையர் கூட்டங் கூட்டமாக வந்தனர். கண்காட்சியின் அமைப்பும், உயர்ந்த ஏற்பாடுகளும், ஒளி வசதிகளும் மயிலை வாசிகளை ஏராளமாக வரவேற்றுக் கவர்ந்ததுடன் சென்னையின் பல பாகங்களிலிருந்து வந்த கல்வித்துறை சம்பந்தமான பல அறிவாளிகளையும் பிரமிக்கச் செய்தது. இக் கண்காட்சியில் அன்னையர்பகுதி மிக அழகாக அமைந்திருந்ததைப் பற்றி யாவரும் உள்ளன்புடன் கூறியதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப் பகுதியைச் சிறப்புற அமைப்பதற்கு உதவிய ஸ்ரீமதிகள் அலமேலு, ஸ்ரீ அம்புஜாக்ஷி, ஸ்ரீ R. சீதா இவர்களே அப் புகழுக்கு உரித்தானவர்கள்.

மற்றும் விற்பனைச் சாலையில் அன்னையர்களில் சிலர் தங்கள் சொந்தச் செலவில் தயாரித்த தின்பண்டங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த தொகையான ரூ. 60-ஐக் கண்காட்சி செலவிற்கு நன்கொடையாக அளித்தது போற்றக்கூடியதொரு செயல்.

ஆண்டு விழா :

இச் சங்க ஆண்டு விழா 1953-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் தேதி கொண்டாடப் பட்டது. இறை வணக்கத்திற்குப் பின் எமது தலைவி ஸ்ரீமதி செல்லம், M.A., L.T., அவர்கள் எல்லோரையும் வரவேற்றார். விழாவிற்குத் தலைமை வகித்த ஸ்ரீமதி அலமேலு ஜெயராமையர் அவர்கள் இச் சங்கத்தின் அவசியத்தை எடுத்துக்கூறிப் பள்ளியின் பல திறப்பட்ட தொண்டுகளையும் பாராட்டிப் பேசினார்.

அன்னையர் கைங்கரியம் :

தொன்று தொட்டே நம் தமிழ் நாடு உயர்ந்த தானங்களுக்குத் தாயகமாக விளங்கி யிருக்கிறது. இவ்வுயரிய செயலை எங்கள் சங்கம் மறக்க முடியுமா! தொண்டு செய்யும் மனப்பான்மை படைத்த இச் சங்க அங்கத்தினர்கள் நவராத்திரி விழாவின் போது சுமார் 300 அன்னையர்களுக்குத் தாம்பூலம் வழங்கும் பொறுப்பைத் தாங்களே ஏற்றுச் செய்து வருகின்றனர். மாணவிகள் சென்ற ஆண்டில் நடித்த 'கிருஷ்ணன் தூது' நாடகத்திற்கு இச்சங்கம் டிக்கட்டுகள் விற்று, பொருள் திரட்டி, பெரும் சேவை செய்திருக்கிறது. இன்னும் பள்ளியில் நடைபெறும் ஸ்ரீராம நவமி பூஜையும் அன்னையர்களால் நடத்தப்பட்டு வருவதைப் பெரிதும் பாராட்டுகிறோம். மற்றும் இவ்வாண்டு தங்கள் சங்க நிதியிலிருந்து பள்ளி நான்காம் அமைப்பு வரை உபகாரச் சம்பளம் அளிக்க முன் வந்துள்ளதையும் இங்கு குறிப்பிடுகிறோம்.

விளையாட்டிலும் அன்னையர் :

சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதி பள்ளி விளையாட்டு விழா நடைபெற்றது. அச்சமயம் தங்கள் குழந்தைகளும், மற்றவர்களும், ஆரவாரிக்க அன்னையர் குதூகலத்துடன் விளையாட்டிலும் பங்கெடுத்துக் கொண்டு வெற்றி பெற்றனர்.

முடிவுரை :

பல சந்தர்ப்பங்களிலும் எங்களுடன் ஒத்துழைத்து சங்கத்தின் உயர்வைக் கருதிவரும் அன்னையர்களின் உதவியை நாங்கள் என்றும் எதிர் பார்க்கிறோம். இச் சங்கம் நீடூழி வாழ்ந்து, பல துறைகளில் தொண்டாற்றும் வண்ணம் இறைவன் அருள் புரியுமாறு வேண்டுகிறோம்.

V. ராஜம்மாள்,
காரியதரிசி.

R. Kokila, VI-B.

ஸங்கீத சபை

கலைகளுக்கெல்லாம் சிகரமாயுள்ளது இசைக் கலை. கல்வியறிவோடு சங்கீதக் கலையுணர்ச்சியும் சிறந்து விளங்க வேண்டு மென்பது நம் பள்ளி சங்கீத சபையின் நோக்கமாகும். இச் சபையின் ஆதரவில் சங்கீதக் கச்சேரிகளும், இசை சம்பந்தமான சர்ச்சைகளும் நடத்தப்படுகின்றன. இது ஆரம்பிக்கப் பெற்று நான்கு ஆண்டுகளே யாயினும் சங்கீதத் துறையில் மிகவும் முன்னேறி வருகிறது. மாணவியருக்கு சங்கீத லக்ஷணை, லக்ஷ்யங்களில் ஆர்வமதிகரித்து வருகிறது. நல்ல சாரீரமும் சங்கீத ஞானமும் உடைய மாணவியருக்குப் பிரத்தியேகமாகப் பாரதி பாடல்களும் பள்ளி விசேஷ பூஜை தினங்களுக்கு ஏற்ற பிரார்த்தனைப் பாடல்களும் கற்றுத் தரப்படுகின்றன.

இவ் ஆண்டு 10-7-'53 அன்று ஆரம்ப விழா நடை பெற்றது. ஸ்ரீ ரங்கராமானுஜ அய்யங்கார், B.A., L.T., அவர்கள் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில அரிய சம்பவங்களைப் பற்றி எடுத்துக் கூறி அவர் கிருதிகள் சிலவற்றைப் பாடியும் காட்டினர். நவம்பர் பதினேழாம் தேதியன்று வித்வான் பரூர் சுந்தரமய்யரின் குமாரர்களான ஸ்ரீ M. S. அனந்தராமன் B.A., ஸ்ரீ M. S. கோபால கிருஷ்ணன் ஆகிய இருவருடைய பிடில் கச்சேரி (Violin duet) தகுந்த பக்க வாத்தியங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. இக் கச்சேரியை அன்று வந்திருந்தவர்களும் மாணவியரும் மிகவும் ரசித்தார்கள்.

மேற்கூறியவாறு, அவ்வப்போது சங்கீதக் கலைஞர்களைக் கொண்டு நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளின் மூலம் மாணவியர் சங்கீதத் திரிமூர்த்திகளின் வரலாறுகளையும் பக்தி ரசம் ததும்பும் அவர்கள் கிருதிகளையும் கேட்டும் கற்றும் சங்கீத ஞானத்தையும் அறிவையும் விருத்தி செய்து கொள்ளுகின்றனர்.

இவ் வருடத்திய சங்கீத சபையின் இறுதிக் கூட்டம் பிப்ரவரி மாதம் 5-ம் தேதி வெள்ளிக்கிழமை யன்று 'சங்கீத விழா' வாகக் கொண்டாடப்பட்டது. இதில் எழுபது மாணவியர் பங்கெடுத்துக் கொண்டனர். அன்றைய நிகழ்ச்சிகளான வேத பாராயணம், நவக்கிரகக் கிருதி, தேவாரம், தில்லானா, குஜராத்தி நடனம், மலையாளக் கும்மி, வாத்திய கோஷ்டி, இராமாயணத்தில் நவ ரசங்கள் (அபிநயம்), பஜனை ஆகியவை ஆசிரியைகளின் ஒத்துழைப்பினால் செவ்வனே நடந்தேறின.

இவ் விழாவிற்குத் தலைமை தாங்கிய சங்கீத கலாநிதி ஸ்ரீ முசிரி சுப்பிரமண்ய ஐயர் அவர்கள் அன்றைய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்ட மாணவியர் ஒவ்வொரு அம்சத்தையும் திறம்படச் செய்ததைப் பாராட்டிப் பேசினர். சங்கீதம் பெண்களுக்கு எவ்வளவு முக்யம் என்பதையும், குழந்தைகள்

அதில் நல்ல தேர்ச்சி பெறுவதற்குப் பாடுபடவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பள்ளித் தலைவியின் ஆதரவையும் பெரியார்களின் ஆசியையும் பரிபூரணமாகப் பெற்றுள்ள இச்சபை இசைப் பயிற்சியில் ஈடுபட்டு முன்னேற்றமடைய கடவுள் அருள் புரிவாராக!

M. ஞானும்பாள்.

பஜனு சத் சங்கம்

நல்லோர் பலர் கூடி நாதனை வாயாரப் பாடி மனமார மகிழ்வதே பஜனு சத் சங்கமாகும்.

நாதன் யார்? அவன் எங்குளன்? நமக்கும் அவனுக்குமுள்ள தொடர்பென்ன? அவனைப் பாடுவதேன்? என்பதை ஆராய்வோம்.

ஆருயிர்களை இணைத்துவைக்கும் அன்பே அவனுரு, அவனது ஆற்றலே பராசக்தி. "அன்பே சிவம்" என்ருர் திருமூலர். அவன் ஒருவனே புருஷன். ஜீவர்களாகிய நாம் அனைவரும் அவனையடைய வேண்டிய சக்திகளே. எடுத்த பிறவி அவனை யடைவதற்காகவென்றே உணர்ந்து, ஆணவத்தினின்றும் விடுபட்டு. அப்பனிடம் கொண்ட பேரின்பக் காதலால் அனைத்திலும் அவனையே கண்டு அல்லும் பகலும் அன்பினல் கரைந்துருகும் தாயுள்ளம் படைத்த மகான்களே நல்லோர்கள். அவர்களே சாதுக்கள். அவர்களுடன் கூடுவதே சத்சங்கம். அன்னர் கூறும் நல்லுரைகளைக் கேட்பதினலும், அவர்களுடன் கலந்து பாடுவதிலும், மனத்திலேறியுள்ள ஆணவத் தடிப்புக் குறைந்து இயல்பாகிய அன்புருவடைந்து, இறைவனை எட்டி ஒட்டமுடியும்.

ஆரணங்களுக்கும் எட்டாத நாரணன் அறிவற்ற ஆய்ச்சியரின் அன்பு வலையில் கட்டுண்டான். குருவியோட்டித் திரிந்த குறமாதுகிய வள்ளியின் உள்ளன்பினல் கவரப்பட்ட குமரன் கல்லிலும் முள்ளிலும் கால்கடுக்க நடந்து சென்றதும் கருணையினலன்ருே? வேட்டுவச்சியாம் சபரியின் எச்சிலையும் விரும்பியுண்டானன்ருே வீரராகவன். மாணிக்கவாசகருக்காக மண் சுமந்து அடியும் பட்டானன்ருே நம் அம்மையப்பன்.

"கல்வியின் பயன் கடவுளை யடைவதே" என்ருர் வள்ளுவர். கல்விகற்கும் பருவத்திலேயே கடவுளன்பை உள்ளத்திலேற்றவேண்டும். கள்ளமற்ற வெள்ளையுள்ளம் படைத்த இளமைப் பருவமே ஆண்டவன் ஆட்கொள்வதற்குரிய பருவமாகும். வயது முதிர்ந்து ஆணவத் தடிப்பேறிவிட்டால் அன்பனை யுணர்ந்து அடையமுடியாது. ஆதலால் மாணவர்களுக்குக் கல்வி

யுடன் கூடவே கடவுளன்பைப் புகட்டுவதும் கலாசாலையின் இன்றியமையாத கடமைகளிலொன்றாகும். அக்கடமை இப்பள்ளியில் சரிவர நடந்து வருவதும் இறைவனருளும் பாராட்டற்குரியதாகும்.

நாள்தோறும் காலைப் பிரார்த்தனையில் நாராயணனையும் நமச்சிவாயனையும் பற்பல பாடல்களில் மாணவிகளனைவரும் சேர்ந்து அவனைப் போற்றுவதை இப்பள்ளி தன் தினசரிக் கடமையாகக் கொண்டுள்ளது. மாலையிலும், பள்ளி முடிந்த பிறகு மாணவிகள் ஸ்ரீராமனை யழைத்துத் தாங்கள் செய்த செயல்களை அவனிடம் அர்ப்பணம் செய்வதும் அற்புதக் காட்சியாகும்.

விநாயகசதுர்த்தி, கோகுலாஷ்டமி, நவராத்திரி முதலிய நாட்களிலும் அந்தந்த தெய்வ உருவங்களுக்குப் பூஜை செய்து மாணவிகளைக் கொண்டு வடமொழிச் சுலோகங்களும் தமிழில் தேவாரம், திவ்வியப்பிரபந்தம் முதலியவற்றிலிருந்து பல பாடல்களைப் பாடச் செய்வதும் இக்கலை நிலையத்தின் வழக்கம். ஒவ்வோராண்டிலும் குறைந்தது பத்துமுறையாவது பல பெரியோர்களின் சொற்பொழிவுகள் நிகழ ஏற்பாடு செய்து மாணவியர் கேட்டின்புற வாய்ப்பளிப்பது இக் கழகத்திற்கேயுரிய தனிச் சிறப்புகளிலொன்று. அதன்படி, இவ்வாண்டிலும் ஜூலை பத்தாம் நாள் மாலை ஸ்ரீமான் பாபநாசம் சிவன் அவர்கள் பஜனையின் மூலமாக இச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

இவ்வருடம் குறிப்பிட்ட தினங்களில் ஸ்ரீமான் சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், ஸ்ரீமான் கண்ணபிரான் பிள்ளையவர்கள், ராமகிருஷ்ண 'மடத்தைச் சார்ந்த சுவாமி பரமாத்மானந்தா அவர்கள் முதலிய பெரியோர்கள் வந்து இறைவனைப்பற்றி இனிமையாகப் பேசி அனைவரையும் பேரின்பத்திலாழ்த்தினர்.

அப்பெரியோர்களும், இச் சங்கமும், இதை நிறுவிய பள்ளியும் நீடூழி வாழ வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்போமாக !

A. K. பாலாம்பிகை,
வித்வான்.

A. Rajeswari, IV-A.

தீனபந்து சங்கம்

மாணவியரின் பள்ளி வாழ்க்கையே அவர்களுடைய பிற்கால வாழ்க்கையின் அடிப்படை என்னும் உண்மையை வெளிப்படுத்தும் பல அரிய சந்தர்ப்பங்கள் பள்ளியில் இடம் பெற்றுள்ளன. தேச சேவை, சமூக சேவை முதலியவற்றில் ஈடுபடுவதற்கு எல்லோராலும் இயலாது. ஆனால் பள்ளியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பல சங்கங்களின் மூலம் பிறருக்குத் தொண்டாற்றும் இன்பத்தை மாணவிகள் எளிதில் அடைய முடிகிறது.

இத்தகைய வாய்ப்பை அளிப்பது பள்ளி தீனபந்து சங்கம். இச்சங்கம் பல தகுதியுடைய மாணவிகளுக்குத் தக்க உதவியை அளிக்கிறது. இச்சங்கத்தின் மூன்று முக்கிய வேலைகள் தேவையுள்ள குழந்தைகளுக்கு இடைவேளை போஜனமளித்தல், இலவச வைத்திய உதவி, மாலையில் போஷணைக் குறைவான குழந்தைகளுக்குப் பால் விநியோகம் செய்தல் முதலியன. இவைகளைத்தவிர இச்சங்கம் ஆண்டுதோறும் சுமார் 250 மாணவிகளுக்கு விஜயதசமியன்று ரவிக்கைத் துண்டுகளைக் கொடுத்தும், வசதியற்ற குழந்தைகளுக்குப் பள்ளிச் சம்பளம் கட்டியும், புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தும் உதவுகிறது. இடைவேளை போஜனம் அருந்தும் மாணவிகளின் தொகை 106. இக்காரியம் ஒழுங்காக நடைபெறுகின்றதா என்று மேற்பார்வை பார்க்க ஆறு உபாத்தியாயினிகள் உதவுகின்றனர். பள்ளித் தலைவி அவர்களும் ஒரு நாள்கூடத் தவறாது போஜனமளிக்கப்படும் இடத்திற்கு வந்து இன்முகங்காட்டி மாணவிகளை மகிழச் செய்கின்றனர். இக்கைங்கரியம் பள்ளி அன்பர்கள் பலர் ஆதரவாலும், பள்ளி இதர மாணவியர்களின் ஒத்துழைப்பினாலும் குறைவற நடைபெற்று வருகிறது. பள்ளி பழைய மாணவிகள், தாய்மார்கள், பள்ளியின் சில நண்பர்கள் ஆகியோர் தம் மனைகளில் நடக்கும் திருமணம், பிறந்த தினக்கொண்டாட்டம் போன்ற விசேஷ தினங்களில் இம் மாணவிகளுக்கு உணவு அளிக்குமாறு பணம் கொடுக்கின்றனர். தவிர பள்ளி மாணவியர் வருஷத்திற்கொரு முறை பள்ளியில் பக்ஷணங்கள் செய்து விற்று, வரும் இலாபத்தை இந்நிதியில் சேர்க்கின்றனர்.

சென்ற ஆண்டு பழைய மாணவியர் திட்டமிட்டபடி, இவ்வாண்டு நவம்பர் மாதம் 5ந் தேதி பள்ளி ஸ்தாபகர் ஸ்ரீ P. S. சிவஸ்வாமி அய்யரின் ஞாபகார்த்தமாக அச்சங்கத்தினர் செலவில் மாணவிகளுக்கு இடைவேளைப் போஜனமளிக்கப்பட்டது.

நம் தலைவி ஸ்ரீமதி S. செல்லம், M.A., L.T., அவர்களின் பெரு முயற்சியால் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சீதாலக்ஷ்மி இலவச

வைத்தியசாலை, மாணவிகளுக்குப் பெரிதும் பயன்படுகிறது. பள்ளி டாக்டர் ஸ்ரீமதி S. திரிபுரசுந்தரி அவர்கள் வருடத்திற்கு இரண்டு முறை எல்லா மாணவிகளுக்கும் வைத்தியப் பரிசீலனை நிகழ்த்துகிறார். அவர்களுள் வைத்திய உதவி தேவையாயிருப்போரும், பொருள் வசதி யற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, டாக்டரால் குறிப்பிடப்பட்ட மருந்துகளைப் பெறுகின்றனர். இவ்வுதவி பெறும் மாணவியர்களை வைத்தியர் வாரத்திற்கு மூன்று முறை வந்து, பார்த்து அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளைக் கூறுகிறார். இத்தகைய மருத்துவ உதவி பெறும் மாணவியரின் தொகை 106. மருந்துகள் மட்டுமன்றி, போஷணைக் குறைவான குழந்தைகளுக்கு மாலையில் ஒரு கோப்பை சூடான பாலும் அளிக்கப்படுகின்றது. இதற்குத் தேவையான பாலை ஐக்கிய நாடுகள் சங்கத்தாரும், இந்திய ஊழியர் ஸ்தாபனச் சங்கத்தாரும் அனுப்பிப் பேருதவி செய்கின்றனர்.

சமூகப் பொது விடமாகிய பள்ளியில் படிக்கும் மாணவிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதும் ஒருவித சமூக சேவையே. ஆதலின் கிடைத்தற்கரிய இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு யாவரும் தங்களாலியன்ற தொண்டாற்ற முன் வரவேண்டும்.

T. கல்பகம், B.A., B.T.

சேவா சுகாதாரச் சங்கம்

நம் பள்ளியில் மாணவியர்களிடையே ஒழுக்கம், தெய்வபக்தி, உழைப்பு, தியாகம், தொண்டு ஆகிய நற்பண்புகள் வேரூன்றச் செய்தற்குப் பல சங்கங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றான சேவா சுகாதாரச் சங்கம், மாணவியர் உள்ளத்தில் சேவை என்னும் அருங்குணத்தைப் பதியவைத்து அவர்களைத் தன்னலமற்ற தொண்டர்களாக்குகிறது.

தன்னலமற்ற சேவை என்னும் அரும்பணியை மாணவியர் நடைமுறையில் நாள்தோறும் ஆற்றுதற்கான பல வாய்ப்புகளைப் பள்ளி அளிக்கின்றது. இவ்வாண்டு சேவா சங்கம், சுகாதாரக் குழு என இரு பிரிவுகளாக இச்சங்கம் செயலாற்றி வருகிறது. இவ்விரண்டு பிரிவுகளிலும் எத்தகைய பணியையும் இன்முகத்துடன் மனமுவந்து செய்யும் ஆற்றலுடையவர்களே அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காலை மாலை பிரார்த்தனை சமயங்களில் ஒழுங்கையும், அமைதியையும் நிறுவுதல், குடிதண்ணீரை முறையாக வழங்குதல், நூல் நிலையத்தில் உதவுதல், இடைவேளை போஜன சமயத்தில் மேற்பார்வையிடுதல், பள்ளி சுற்றுப்புற சுத்தத்தைக்

கவனித்தல் ஆகிய பணிகளைச் செய்வதில் மாணவியர் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

சேவா சங்கத்தில் 66 அங்கத்தினர்களும் சுகாதாரக்குழுவில் 46 அங்கத்தினர்களுமாக இச்சங்கத்தின் மொத்த அங்கத்தினர்கள் 112 பேர். சேவா சங்கம் ஐந்து பிரிவுகளாகவும், சுகாதாரக்குழு ஆறு பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலுள்ளவர்களும் தத்தம் தலைவிகளின் மேற்பார்வையில் திறம்பட வேலை செய்கின்றனர். மேலும் இச்சங்கம் மாதமொரு முறை கூடி தாம் செய்யும் வேலைகளில் அவ்வப்போது காணப்படும் குறைபாடுகளைத் தலைவிக்குத் தெரிவித்து அவற்றை அகற்ற ஆலோசனை கூறும். இவ்வாண்டு இச்சங்கம் ஏழு முறைகள் கூடியது. இவ்வங்கத்தினர்கள் ' பள்ளி பரிசளிப்பு விழா, மாணவியர் வருடாந்திர நாடகம், விசேஷ பூஜைகள், மாணவியர் சங்கக் கூட்டங்கள், சத்சங்கக் கூட்டங்கள்போன்ற சமயங்களில் ஒழுங்கை நிலை நாட்டியதுடன், சந்தர்ப்பங்களுக் கேற்ப ஆசிரியர்களுக்கும் பேருதவி செய்தனர்.

இச்சங்கம் ஜூனியர் செஞ்சிலுவைச் சங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அச்சங்கத்தின் கொள்கைகளை இது கூடியவரையில் நிறைவேற்ற முயலுகிறது. அதன் அம்சங்களில் ஒன்றான 'ஒழுங்காகப் பெயர்தல்' நடைமுறையில் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதாவது முக்கியமாக இடைவேளைகளில் மாணவியர் தாறுமாறாகச் சென்று ஒருவரோடொருவர் மோதிக் கொள்வதால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக 'One way Traffic' முறையை அனுசரிக்கின்றனர். இச்சங்க அங்கத்தினர்களின் மேற்பார்வையில் நடைபெறும் இந்த ஒழுங்கு முறையால் ஓரளவு நன்மை ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

இவ்வாறாகச் சேவா சுகாதாரச் சங்கத்தினர் பல அலுவல்களிலும் கலந்துகொண்டு பணியாற்ற பழக்கமளிக்கப்படுகின்றனர். இவ்வாறு பயிற்சிபெறும் மாணவிகள் பிற்காலத்தில் சிறந்த சமூக ஊழியர்களாகத் திகழ்ந்து நம் பள்ளியின் பெருமையை நிலை நாட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

H. R. நாகமணி, B.A., B.T.

S. Janaki (*adult*).

குடிமைப் பயிற்சி

வருங்காலப் பிரஜைகளாகிய நம் மாணவிகளைத் தக்க முறையில் பயிற்றுவிப்பது பள்ளிகளின் கடமையாகும். அப்பயிற்சிகளைப் பெற மாணவிகளுக்குப் பல சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. கல்வி அதிகாரிகளால், முதல் பாரம், முதல் ஆறும் பாரம் வரை பாடத் திட்டத்திற் புகுத்தப்பட்டிருக்கும் குடிமைப் பயிற்சி தனிச் சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது. இது செவ்வனே நடைபெற பள்ளி நிர்வாகத்தினர் ஆறு ஆசிரியைகளுக்குப் பிரத்யேகப் பயிற்சி பெறும் வசதி யளித்துள்ளனர்.

நாட்டுப்பற்று, கடமை யுணர்ச்சி, நடுவுநிலைமை, பிறர்நலம் பேணுதல், நல்லொழுக்கம், அடக்கம், நிர்வாக ஆற்றல், கூர்ந்து கவனிக்கும் திறமை, சுயநலம் கருதாமை, பேச்சு வன்மை ஆகியவற்றை மாணவியரிடை வளரச் செய்வதே இப் பயிற்சியின் முக்கிய நோக்கம். அதோடு பிரயோஜனப் படக்கூடிய கைத்தொழில்களைக் கற்றுக்கொள்வதற்கும், முதல் உதவி செய்யும் முறைகளை அறியவும் வாய்ப்பு அளிக்கிறது.

மேற் கூறப்பட்ட நற்பண்புகள் யாவும் மாணவியரிடையே வேரூன்றுவதற்குப் பள்ளியில் பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாணவியர் சுய ஆட்சிக் குழு மாதமொரு முறை தலைவியுடன் கலந்தாலோசித்து, பள்ளி நிர்வாகத்தில் அவர்களுக்குரிய சிறிய பங்கை ஏற்றுக் கொள்ளுகிறது. அன்பு, அறிவு, சேவை சரணம் ஆகிய நான்கு குறிக்கோள்களில் அன்பு, சேவை இவற்றின் மேன்மையை இளம் மாணவர் அநுபவத்தில் உணர சேவா சுகாதாரச் சங்கங்கள் உதவி புரிகின்றன.

பஜனை சத்சங்கங்களின் ஆதரவில் பெரியோர்களால் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளின் மூலம், படித்தறிய முடியாத உண்மைகள் பலவற்றை மாணவியர் கேட்டறிந்து அறிவை விசாலித்துக் கொள்ளுகின்றனர். வருடாந்திரப் பேச்சு வன்மைப் போட்டிகள் அவர்களுக்குத் தைரியமாகப் பேசும் ஆற்றலை அதிகரிக்கச் செய்கிறது.

சர்க்கார் பாடத்திட்டத்தின் அமைப்பின்படி முதல் பாரம் முதல் நான்காம் பாரம் வரையுள்ள மாணவிகள் பின்வரும் தலைப்புக்களிலுள்ள விஷயங்களில் தேர்ச்சி பெறவேண்டியது அவசியம்.—தேசீயக் கொடி, பிறநாட்டுக் கொடிகள், முடிச்சுக்கள், சுகாதார முறை, முதலுதவி தேசீய வீரர்கள், தேசீய கீதங்கள், நாட்டுப் பாடல்கள், நடித்தல், சுற்றுப்புற அறிவு, சமிக்ஞைமூலம் செய்தி யறிவித்தல், கூடாரம் அடித்தல், தீ மூட்டுதல் முதலியன. இவைகளில் மாணவியருக்குப் பயிற்சியளித்து, அவற்றின் தேர்ச்சி விவரங்கள் குடிமைப் பயிற்சி யறிக்கையில் குறிக்கப்பெற்று, வருடம் இருமுறை பெற்றோர் பார்வைக்கு அனுப்பப்படுகின்றன.

பள்ளியிலுள்ள ஒவ்வொரு வகுப்பு மாணவியரும் எட்டு அணிகளாகப் பிரிந்துள்ளனர். ஒவ்வொரு அணிக்கும் ஒரு தலைவியுண்டு. வகுப்புத் தலைவி, உபதலைவியுட்பட இவ் அணித்தலைவிகள் வகுப்பு ஆசிரியையின் தலைமையில் மாதமொருமுறை கூடி வகுப்பில் அவ்வப்போது எழும் பிரச்னைகளைத் தீர்க்கப் பாடுபடுகின்றனர். இக் கூட்டங்களின் நிகழ்ச்சிகள் வகுப்புக்குறிப்புப் புத்தகத்தில் (Class Log Book) பதிவு செய்யப்படுகின்றன. இப் புத்தகத்தில் நாட் குறிப்புக்கள், அணிகளின் சிறப்பியல்புகள், படக்காட்சி, ஒலி பரப்பு முதலியனவும் குறிக்கப் பெறுகின்றன. இப்புத்தகத்திற்கு விஷயம் திரட்டுவது அணித் தலைவிகளைச் சார்ந்தது.

மேற்கூறிய பல துறைகளிலும் பயிற்சிபெறும் மாணவியர் பிற்காலத்தில் குடியரசு இந்தியாவின் நற்குடிகளாக விளங்குவார்கள் என்பது திண்ணம்.

V. மீனாக்ஷி, M A., L.T.

ஸ்தாபகர் தினம் (5-11-'53)

சென்ற நவம்பர் மாதம் ஐந்தாம் நாள் எங்கள் பள்ளிச் சரித்திரத்தில் மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய புனித நாள். காலஞ்சென்ற, எம் பள்ளி ஸ்தாபகரான ஸ்ரீ சிவஸ்வாமி ஐயர் பதின்மூன்று ஆண்டுகளுக்குமுன் இட்ட திட்டம் நிறைவேறப்பெற்று, பள்ளிக்கூடக் கட்டிடம் வானளாவ, கம்பீரத் தோற்றத்தோடு தேசீயக் கொடியையும், பள்ளிக்கொடியையும் பெருமிதத்துடன் பறக்கவிட்டு நின்றது. முதன் மந்திரி ராஜாஜி அவர்கள் புதிதாகக் கட்டப்பெற்ற பள்ளியின் மேற்குப் பகுதியையும் ஸ்ரீ சிவஸ்வாமி ஐயரின் உருவச்சிலையையும் திறந்துவைத்தார்.

எம் பாடசாலை சீர்கேடடைந்த நிலையில் இருந்தபோது, அதைக் கைதூக்கிவிட்டு, தம் பெருஞ் செல்வத்தை அதன் வளர்ச்சிக்கே ஒதுக்கிவைத்த பெருந்தகையாளர் ஸ்ரீ சிவசுஸ்வாமி ஐயர், தம் பூத உடல் நீத்துப் புகழுடம்பு எய்தியது 1946-ம் ஆண்டு நவம்பர் ஐந்தாம் நாளாகும். ஏழு வருடங்களுக்குப் பிறகு, இவ் வருடம், அவர் மறைந்த நாளாகிய நவம்பர் ஐந்தாம் தேதியன்று, பள்ளிக்கூடத் திறப்பு விழாவும் அவர் உருவச்சிலைத் திறப்பு விழாவும் சேர்ந்தாற்போற் கொண்டாடுவது பொருத்தமுடையது எனத் தேர்ந்தனர் பள்ளி நிர்வாக அங்கத்தினர்கள். அவ்வைபவத்தை இனிது நடத்தித்தர முற்றிலும் தகுதியுடையவர் ராஜாஜி எனக் கருதிய நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஸர். எஸ் வரதாச்சாரியார்,

10 DEC 1955
MADRAS

Opening of the Western Block by Rajaji : 5-11-'53.

Unveiling the Bust of Sir P. S. Sivaswami Ayyar by Rajaji : 5-11-'53.



Head Mistress welcoming Rajaji.



Rajaji addressing the Meeting.

மஹாகுலபதி ஸ்ரீ கே. ரங்கசுவாமி ஐயங்கார், பள்ளித் தலைவி ஆகியோர் அவரை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் செய்தனர்.

குறிப்பிட்ட நேரத்தில் ராஜாஜி வந்தார். பூரண கும்பத்துடன், குழந்தைகள் அவரை மலர் தூவி வரவேற்றனர். பள்ளிச் சேவா சங்க மாணவியர் அணிவகுத்து நின்று அவருக்கு மரியாதை செலுத்தினர். தலைமையாசிரியை ஸ்ரீ எஸ். செல்லம், M A, L.T., அவர்களும், ஆசிரியர்களும் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களும் தலைவரை வரவேற்றனர். நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம், கல்வி இலாகா டைரெக்டர் ஸ்ரீமதி O. C. ஸ்ரீனிவாசன், மயிலைப் பிரமுகர்கள் பலர் ஆகியோர் விஜயம் செய்திருந்தனர்.

ராஜாஜி சிவஸ்வாமி ஐயருடைய உருவச்சிலையையும், பள்ளிக் கட்டிடத்தையும் திறந்து வைத்த பிறகு அலங்கரிக்கப்பெற்ற மேடை மீது தோன்றினர். பிரார்த்தனை கீதத்துடன் விழா ஆரம்பமாயிற்று. பள்ளி நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஸர். எஸ் வரதாச்சாரியார் தலைவரை வரவேற்றுப் பேசினர். பள்ளியின் வரலாற்றையும் அதற்கு அவ்வப்போது நேர்ந்த பல இன்னல்களையும், ஸ்ரீ சிவஸ்வாமி ஐயர் கைகொடுத்து ஏற்றதிலிருந்து அது வளர்ச்சி யடைந்து வந்ததையும் எடுத்துரைத்தார்.

பெண் கல்வி விஷயமாகப் பேசுகையில் பெண்களுக்குரிய பொறுப்பான உன்னத ஸ்தானத்தை உணர்த்தி, அறிவூட்டும் ஸ்தாபனமாக இது விளங்க வேண்டுமென்பதே மறைந்த பெரியார் கனவு என்பதைத் தெரிவித்தார்.

பள்ளித் தலைவி அவர்கள் பேசுகையில் ஸ்ரீ சிவஸ்வாமி ஐயரின் தியாக உணர்ச்சி எல்லோராலும் பாராட்டுதற்குரியதென்றும், பள்ளிக்கட்டிடம் கட்டி முடிக்க அரும்பாடு பட்ட ஸ்ரீ கே. ரங்கசுவாமி ஐயங்காரின் சேவை போற்றத் தக்கதென்றும் குறிப்பிட்டார்.

பாடசாலைக் குழந்தைகள் ராஜாஜியைப் புகழ்ந்தும், ஸ்ரீ சிவஸ்வாமி ஐயரின் பரந்த நோக்கம், சேவை, தரும சிந்தை முதலியவற்றைப் பாராட்டியும் பல பாடல்கள் பாடினர். 'தைத்ரோபநிஷத்தி'லிருந்து சில பகுதிகளைக் குழந்தைகள் உச்சரித்தது தம்மை மிகவும் கவர்ந்ததாக ராஜாஜி தம் தலைமை யுரையில் குறிப்பிட்டார்.

ராஜாஜி, பள்ளிக்கூட நிர்வாகிகள் கேட்டுக் கொண்டபடி, பள்ளிக் கட்டிட வேலையை மேற்பார்த்து உதவிய Rao Sahib K. சுப்பிரமண்ய ஐயர் அவர்களுக்கும், Modern Construction Company சொந்தக்காரரான ஸ்ரீ N. R. சீனிவாசன் அவர்களுக்கும் இரு 'ஷீல்டு'கள் அளித்தார்.

முதன் மந்திரி ராஜாஜி தம் தலைமையுரையில் ஸர் எஸ். வரதாச்சாரியார் அவர்களையும், குருகுல தர்மாச்சாரிய ஸ்ரீ கே. ரங்கசுவாமி

ஐயங்காரையும், பள்ளித் தலைவி, ஆசிரியைகள், குழந்தைகள் ஆகியோரையும் தனித்தனி புகழ்ந்து பேசினார். இவர் தலைமையுரையின் சுருக்கம் கீழே காண்க. நீதிபதி P. N. இராமஸ்வாமி ஐயர் அவர்கள் வந்தனோபசாரம் கூறினார். குழந்தைகள் பள்ளி மங்களமும், தேசிய கீதமும் பாட விழா இனிது முடிவடைந்தது.

V. சரோஜினி.

இராஜாஜி புகழுரை

[ஸ்தாபகர் தினத்தன்று தலைமை வகித்த முதன் மந்திரி இராஜாஜி அவர்கள் பேசியதிலிருந்து சில குறிப்புக்கள். 5-11-'53]

"இந்த விழாவில் கலந்து கொண்ட நான் சந்தோஷத்திலும், பக்தியிலும், வியப்பிலும் ஆழ்ந்து கிடக்கிறேன். ஸ்ரீ சிவஸ்வாமி ஐயர் மீது பாடப்பெற்ற பாடல்களைக் கேட்ட பிறகும், ஸ்ரீ வரதாச்சாரியார் அவரைப் புகழ்ந்து பேசியதற்குப் பிறகும், அப்பெரியாரைப் பற்றி மேலும் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவர் மஹா புருஷர் என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம்."

"ஒரு மனிதனுடைய குணம் அவனது ஒவ்வொரு நடவடிக்கையிலும் வெளிப்படும். ஸ்ரீ சிவஸ்வாமி ஐயரின் உயர்ந்த தர்ம நோக்கத்தைப்பற்றிக் குறிப்பிட ஒன்றுண்டு. இவர் தம்மிடம் இருந்த எல்லாப் பொருளையும் தர்மத்திற்கே செலவிட்டார். தாம் வசிக்கக் கட்டிய 'பங்களா'வை விற்று, இப்பள்ளிக்குக் கொடுத்துதவினார். கட்டின வீட்டைத் தர்மத்திற்காக விற்றுக் கொடுப்பது எளிதல்ல என்பது யோசித்தால் தெரியவரும். விற்ற பிறகு அதே வீட்டில் குடியிருக்க அதன் சொந்தக்காரர் அனுமதித்த போதிலும், அது முறையல்ல என்று ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்தி அதில் குடிபோனார். இந்தத் தர்ம உணர்ச்சியை இங்கு படிக்கும் குழந்தைகளும் உணர வேண்டும். சீலமே பூஷணமென்ற ஸ்ரீ சிவஸ்வாமி ஐயரின் பெரும்போக்கை உணர்வதே நல்ல படிப்பாகும். மறைந்த பெரியார்கள் புகழை நிலைநாட்ட இதரர் சிரமப்பட்டு ஞாபகச் சின்னங்கள் எழுப்புகிறார்கள். ஆனால் ஸ்ரீ சிவஸ்வாமி ஐயர் புகழுக்கு இப்பள்ளியும் திருக்காட்டுப் பள்ளியில் அவர் பெயரால் நடைபெற்றுவரும் பள்ளியுமே ஞாபகச் சின்னங்கள்."

"பள்ளி நிர்வாகத் தலைவரான சர் எஸ். வரதாச்சாரியார் சான்றோர்க் குரிய அடக்கத்தோடு மிக அழகாகப் பேசினார். சாமர்த்தியம் அடக்கம், அறிவு, ஞானம் இவை

இல்லாவிட்டால் இப்படிப் பேச முடியுமா? இவர் வகிக்கும் பதவி போன்ற பெரும் தகுதிக்குத்தான் ஆளாக முடியுமா? பெண் கல்வி முறை பற்றி, ஸ்ரீ வரதாச்சாரியார் விளக்கமாக முழுவதும் பேசிவிட்டார். என் மனதிலுள்ள கருத்தையே அவர் கூறியிருப்பதால் நான் அதை மீண்டும் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை."

"இப் பாடசாலைக் காரியதரிசி ஸ்ரீ ரங்கசுவாமி ஐயங்கார் பள்ளிக்கூடங்களைச் சீர்திருத்துவதற்கென்றே பிரம்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட தனிப் பிரகிருதி என்று சொன்னால் மிகையாகாது. அதனால் தான் அவர் 'ரிடயர்' ஆன பிறகும் விட்டுப்போக மனமில்லாமல் தொடர்ந்து சேவை செய்கிறார். இயற்கைக்கு மாறாகத் தம் கொள்கையை மாற்றிக் கொள்ள ஒரு போதும் ஒருப்பட மாட்டார். இவர் இன்னும் இதேபோல் பல வருஷங்கள் இருந்து தொண்டாற்றி, நிலை குலைந்த பல பள்ளிகளைச் சீர்பெறச் செய்யவேண்டுமென்பது என் ஆவல்."

"தலைமையாசிரியை அவர்கள் நன்றி ததும்ப, அருமையாக, உள்ளன்போடு, மனதில் எழுந்ததை அழகாகப் பேசினார்கள். இவரைப் போல் பெண்கள் பள்ளிக்கூடத்து யஜமானியாவதற்கு எல்லாத் தகுதியும் உடையராகப் பலர் இருக்க முடியாது. பல குடும்பத்துக் குழந்தைகள் அநேகருக்குக் கல்வி கற்றுத்தர நேர்மையும் திறமையும் அவசியம். இவரைப் போல் சிறந்த தலைமையாசிரியைகள் எண்ணிக்கை மிகவும் குறைவு; பள்ளிக்கூடங்களோ எண்ணிலடங்காதவை. பெண் கல்வியின் நோக்கம் பொதுவாக இரண்டாக இருக்கவேண்டும். ஒன்று, நல்ல குடும்பத்தில் தாயாக அமர்வது; அல்லது, அது முடியாவிட்டால் இவரைப் போல் நல்ல தலைமையாசிரியை ஆவது. ஸ்ரீ வரதாச்சாரியார், ஸ்ரீமதி செல்லம்மாள், இப்போதைய ஆசிரியர் குழுவினர் இருக்கும் வரை இப்பள்ளிக்கு ஒரு குறைவும் நேர முடியாது."

"குழந்தைகள் உபநிஷத்திலிருந்து சில பகுதிகளைப் பாடியது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. எல்லா உண்மைகளும் அடங்கியது அவர்கள் பாடிய பகுதி. இதை ஒரு பட்டமளிப்புப் பிரசங்கம் என்று சொன்னால் மிகையாகாது. இப்பள்ளிக் குழந்தைகள் குதூகலமாக, சந்தோஷமாகச் சிரித்த முகத்துடன் இருப்பதைக் காண எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது. இவர்கள் தோற்றமே இப்பள்ளி எந்த விதமாக நடைபெறுகிறது என்பதற்கு அத்தாட்சி. எல்லோருக்கும் என் ஆசி."

S. Ruby Babu, II-C.

இரக்கமில்லாதவன் நெஞ்சம் இரும்பினும் கொடிது

ஆசிரியர் இன்பச்செலவு: 1953-54

வழக்கம்போல் இவ்வாண்டும் பள்ளி ஆசிரியர் சங்க ஆதரவில், நவராத்திரி விடுமுறையில் உல்லாசப் பிரயாணம் செய்யத் தீர்மானித்து அக்டோபர் மாதம் 7-ஆம் தேதி புதன்கிழமையன்று பகல் 10-மணிக்கு, எங்கள் தலைவியுட்பட 20 பேர் திருவண்ணாமலை, செஞ்சி முதலிய ஊர்களுக்குப் பிரயாணமானோம்.

சௌகரியமாகப் பிரயாணம் செய்து அன்றிரவு 7-மணிக்குத் திருவண்ணாமலையை யடைந்தோம். அங்கு நாங்கள் தங்குவதற்குப் பிரம்மாண்டமானதொரு சத்திரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பஞ்சலிங்கஸ்தலங்களில் ஒன்றான திருவண்ணாமலையையும், அருகிலுள்ள சரித்திரப்பிரசித்திபெற்ற செஞ்சிக்கோட்டையையும் காண்பதே எங்கள் பிரயாணத்தின் முக்கிய நோக்கம்.

அதற்கேற்ப எங்கள் வரவை எதிர்நோக்கி சகல ஏற்பாடுகளையும் செய்து, வழிகாட்டியாகவும் எங்களுடன் வர இசைந்த அன்பர் ஒருவரின் உதவியால் பற்பல இடங்களைப் பார்த்தோம். இந்தஸ்தலத்திற்கு வரும் பக்த கோடிகள் தவறாமற் செய்யும் கிரிப்பிரதக்ஷிணம் செய்து வழியிலுள்ள ரமணாச்ரமத்திற்குச் சென்றோம். நாங்கள் அங்கு சிறிது நேரமே தங்கினோமெனினும் ஆங்கு நிலவிய புனிதத்தன்மை எங்கள் மனதைக் கவர்ந்தது. பின் அடி அண்ணாமலை யாரைத் தரிசித்து சிவாச்ரமத்திற்குச் சென்று சிவா சுவாமிகளைத் தரிசித்தோம். நாங்கள் அங்கு தங்கிய சிறிது நேரத்தில் எங்களுக்கு அவர் செய்த அரிய உபதேசம் எங்கள் மனதில் நன்கு பதிந்துவிட்டது. அவ்வாச்சிரமத்தில் எழுதப்பட்டிருந்த பொன்மொழிகள் மேலும் எங்களை உணர்ச்சி வசப்படுத்தின. மாலையில் மலைமீதேறி பலதீர்த்தங்களையும், ஆதியில் ரமணர் தங்கிய ஆச்ரமத்தையும், பிற ஆச்ரமங்களையும் கண்டு மகிழ்வெய்தினோம். பின்பு கோவிலுக்குச் சென்று ஜோதிர்லிங்கமாய் அமைந்துள்ள அருணாசலேச்வரரையும் அம்பிகையையும் தரிசித்ததோடு, அவ்வமயம் விமரிசையாக நடந்து கொண்டிருந்த நவராத்திரி விழாவையும் கண்டுகளித்தோம். சற்றுத் தொலைவிலிருந்த துர்க்கையம்மன் கோவிலுக்கும் சென்று சந்தனக் காப்புடன் காட்சியளித்த சக்தியைக் கண்குளிரக் கண்டோம்.

மறுநாள் காலை செஞ்சியைக் காண ஆவலுடன் புறப்பட்டோம். வெகுசீக்கிரத்தில் அதை யடைந்தோம். வழுவழுப்பான பெருங் கூழாங்கற்கள் போன்ற பாறைகள்; இடிந்த கோபுரங்கள்; சிதைந்த மதிற்சுவர்கள்; பயங்கரத் தனிமையைப் பிரதிபலிக்கும் சூழ்நிலை; விஜயநகர பாணியில் அமையப்பெற்ற கோபுரங்கள்.

செஞ்சிக் கோட்டை மூன்று மலைகளைச் சுற்றி அமைந்துள்ளது.

தெற்குப் பகுதியிலுள்ள ராஜகிரி என்பதுதான் இம்மூன்றனுள்ளும் உயர்ந்தது. 800 அடி உயரம். நடுவே இம்மலை செங்குத்தாகச் செல்கிறது. ராஜகிரியின் உச்சியை அடையு முன்பு ஒன்பது வாயில்களைக் கடக்கவேண்டும். மலை ஏறுவதற்குமுன் அதன் அடிவாரத்திலுள்ள சாதுல்லாகான் மசூதி, கல்யாணமஹால், தேசிங்கின் பாழடைந்த அரண்மனை, யானைக்குளம், பிரம்மாண்டமான களஞ்சியங்கள், உடற்பயிற்சிச் சாலை, சபாமண்டபங்கள் முதலிய வற்றைப் பார்த்தோம். கல்யாண மஹாலுக்கருகே இருக்கும் வேங்கடரமணஸ்வாமி கோவில் இன்றும் புத்துரு மாறாமல் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது.

